உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

இது

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

எனப் பெயரிய

## சைவ மஹா சபையின்

மாதாந்தப் பத்திரிகை.


| மலர் 6. | சித்தார்த்தி ஹூ பங்குனி மீ - 1920 ஹூ மார்ச் மீ<br>இரௌத்திரி, சித்திரை மீ - 1920 ஹூ ஏப்ரல் மீ | இதழ் 3-4 |
|---|---|---|


உள்ளுறை. பக்கம்.


திருநாவுக்கரசு நாயனார் துதி ... ... ... 49
சிவஞானபோதம் ... ... ... ... 49
காசிகண்டம் (வியாதன் கையும் நாவும் எழாது நின்றது) ... 52
சிவமஹாபுராணம் சிவயோக விபூதி ... ... ... 53
சந்தியாவந்தனம் ... ... ... ... 57
ஹரதத்தாசாரிய சுவாமிகள் சரித்திரம் ... ... 61
அர்ச்சாதீபம் ... ... — ... ... 64
சென்னைச்சிவனடியார் திருக்கூட்டத்தின் 21 வது வருடப்பூர்த்திவிழா ... ... 67
ஷை 21-வது சபாவருடத்துச் சபாக்கிரமந்தமும், வரவு செலவு கணக்கும். ... 69



பத்திரிகாசிரியர்

இருக்கம் - ஆதிமூலமுதலியார்,
(Retired Accountant, Military Accts., Department.)
* நெ. 43, பாளையப்பன் வீதி, ஏழுகிணறு, சென்னை.


—o—

அச்சுக்கூடம் இடம் மாறுவதனால் * இவ்விலாசத்திற்கே கடிதங்கள் அனுப்புதல்வேண்டும்.

—o—


வைதிக சைவ அச்சுக்கூடம்.
1920.

## சைவ—முதல் ஐந்துமலர்.

சென்ற இரண்டு வருடங்களில் பலர் முதலிலிருந்து எல்லா மலர்களும் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்ததனால் இது வரையில் குறைவாயிருந்த இதழ்களை மீண்டும் அச்சிட்டு இருநூறு பிரதிகள் சித்தப்படுத்தி, 1915ஆ முதல் 1919ஆ வரையில் வெளிவந்த முதல் ஐந்துமலர்களையும் ஒன்றாய்ச்சேர்த்து காலிகோ கட்டடம் செய்து வைத்திருக்கிறோம். இதுவரையில் கட்டடம் செய்யப்படாமலே இவைகள் 5-ரூபா வீதமாக விற்கப்பட்டன. இப்போதுள்ள பணஅவசரத்தால் (கட்டடம் செய்வதற்குப் பிரதி ஒன்றுக்குப் பத்தணாவீதம் நேரிடும் செலவையும் கருதாமல்) காலிகோ கட்டடம் செய்யப்பட்டுள்ள 5 மலர்களையும், 150 பிரதிவரையில், தபால் செலவுட்பட ஐந்துரூபாவுக்கு அனுப்புகிறோம்.

பத்திரிகாசிரியர்.

## தாமதம். பத்திரிகையின் தாமதம்.

நாம் ஒவ்வொருமாதப் பத்திரிகையையும் அவ்வம்மாதத்தில் முதல் வாரத்திலேயே அனுப்பும் விரதம் பூண்டு முதல் இரண்டரை வருடம் வரையில் அவ்வாறே செய்துவந்தோம். பிறகு அச்சுக்கூடம் வைத்துக்கொண்டால் நலமாயிருக்குமென்று நினைத்து அச்சுக்கூடம் வைத்துக்கொண்டு 16 பக்கங்களாக வெளிவந்த பத்திரிகையை 24 பக்கங்களாக வெளியிடத் தொடங்கினோம். அதன் பின் நமக்கு ஒன்றின்பின் ஒன்றாக பற்பல இடையூறுகள் நேரிடத் தொடங்கின. காகிதம் முதலியயாவும் மிகவும் விலையேறிவிட்டன. ஆட்கள் சம்பளம் அதிகரித்து விட்டது. அதிக சம்பளம் கொடுத்தாலும் நல்லவேலைக்காரர்கள் கிடைப்பதில்லை ஆட்கள் கிடைத்தாலும் திடீரென்று நீங்கி வேறிடம் போய்விடுகிறார்கள். புத்தகங்களை அச்சிடக் கொடுப்போரும் தங்களுக்கு அனுப்பும் திருத்தப் பிரதிகளை அப்போதைக்கப்போது திருத்தியனுப்பாமல் மாதக்கணக்காக வைத்திருந்து திருத்துகிறார்கள். இவற்றால் நம்பத்திரிகையை யச்சிடுவதற்கு சிலசமயங்களில் ஆட்கள் இல்லாமலும், சிலசமயங்களில் எழுத்தில்லாமலும் பத்திரிகை மிகவும் தாமதித்து வெளியிட நேர்ந்தது. மார்ச், ஏப்ரல்மீ பத்திரிகையை ஏப்ரல்மீ வெளியிடுவோமென்று எதிர்பார்த்தும் நிறைவேறவில்லை. இவ்வாறு இதுவரையில் பலவிதமான கஷ்ட நஷ்டங்களும் தாமதங்களும் விளைந்தன. இவற்றை விரிக்கில் பெருகும். ஆதலால் இப்போது அச்சுக்கூடத்தை விற்றுவிட உத்தேசித்திருக்கின்றோம். அதன் பின்னரே நாம் கவலையின்றி எம்கவனத்தையும் காலத்தையும் பத்திரிகை விஷயமாகச் செலுத்த இயலுமென்று எதிர்பார்க்கிறோம்.

பத்திரிகாசிரியர்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.


| | | |
|---|---|---|
| மலர் 6. | சித்தார்த்தி௵ பங்குனி௴ 1920௵ மார்ச்௴<br>சித்தார்த்தி௵ சித்திரை௴ ,, ஏப்ரல்௴ | இதழ் 3-4. |


## திருநாவுக்கரசு நாயனார் துதி.

(காசிகண்டம்.)

கருவாழிக் கரைகாணச் சாக்கியர்கள் கற்றூணிற் சிக்க யாத்துப்
பெருவாழி யிடைவீழ்ப்ப வதுபுணையாக் கரையேறிப் பெட்பி னுள்ள
முருகாமெய்ம் மயிர்பொடிப்ப வோங்கெயின்மூன் றெரித்தோனை யுவந்து
திருநாவுக் கரசனிரு சேவடிப்பூங் கமலமலர் சென்னிசேர்ப்பாம். [பாடுந்

(இ-ள்.) பிறவிக் கடலின் எல்லைகடந்து கரைகாண முடியாத சமணசமயிகள் கற்றூணில் சிக்குண்ணும்படி கட்டிப் பெரிய கடலினிடத்தில் விழச்செய்ய அவர்கள் கட்டிவிடுத்த கற்றூணையே தெப்பமாகக் கொண்டு திருப்பாதிரிப் புலியூர்க் கருகில் கரையேறி ஆசையுடன் மனமுருகி, சரீர முழுவதும் மயிர்க் குச்செறியும்படி, உயர்கின்ற மும்மதிலையுடைய திரிபுரத்தை எரித்தவராகிய சிவபெருமானை மனவிருப்போடு தமிழ் வேதமாகிய தேவாரத்தாற் றுதி செய்த திருநாவுக்கரசு நாயனாரது இரண்டு சிவந்த திருவடிகளாகிய அழகுபொருந்திய தாமரை மலர்களைச் சிரமேற் கொள்வாம். எ-று.

---

## சிவஞானபோதம்.

சுட்டி யுணர்வதனைச் சுட்டி யசத்தென்னச்
சட்ட வினியுளது சத்தேகாண்—சுட்டி
யுணர்ந்தநீ சத்தல்லை யுண்மையைத் தைவம்
புணர்ந்ததனாற் பொய்விட்டுப் போம்.

இவ்வெண்பா, ஆகாச முதலிய அசத்தை அசத்து என்று கண்டு நீங்கிய விடத்து, அவ்வாறு தோன்றுவது வேறொரு பொருள்

என்று கொள்ளலாகாதோ, அது ஞானசொரூபமே எனில் அதற்குப் பிரமாணம் யாது என்னும் ஆசங்கையை நீக்கி அது ஞான சொரூபமே என்பதனை வலியுறுத்துகின்றது.

(இ-ள்.) சுட்டி உணர்வதனை =(ஏகதேச உணர்வால்) சுட்டி உணரப்படும் நிலம் முதல் சிவம் ஈறாகிய பிரபஞ்சத்தை—சுட்டி அசத்து என்ன =(அசத்ததிகரணத்திற் கூறியவாறு) ஒவ்வொன்றாகச் சுட்டி அசத் தென்று கண்டு கழித்துக் கொண்டே சென்றவிடத்து—இனி உளது சத்தே சட்ட காண் =முடிவில் கோசரமாவது (வேறின்மையால் பாரிசேட அளவையால் அது) சத்தேயாம் என்று செம்மையே அறிவாயாக—(அப்படியாயின் அசத்தின் வேறாய் முடிவில் கோசரமாவது சத்தேயாம் என்பது பொருந்தும். அச்சத்து முதல்வனன் றி உயிரேயாம் என்றால் வரும் குற்றமென்னை எனில்)—சுட்டி உணர்ந்த நீ சத்து அல்லை =(இதுகாறும் அசத்தோடு கூடி நிலை பெறுமாறின்றி, ஒவ்வொன்றாகச்) சுட்டி அறிந்து வந்த நீ (என்றும் ஒரு தன்மைத்தாய் நிலை பெற்று நிகழும் அறிவாகிய) சத்தாவாயல்லை—(அசத்தை அசத் தென்று கண்டு நீங்கிய போது)—உண்மையை =உளதாகிய சத்தினை—தைவம் (ஆய்) புணர்ந்ததனல் =நீ அடிமையாகச் சென்று தலைப்பட்டதினால்—பொய் விட்டுப் போம் =(சுட்டியறிவதாகிய ஏகதேச அறிவைச் செய்யும்) பொது வியல்பு நின்னை விட்டு நீங்கும். (ஆகலின் நீ அசத்து மல்லை) (எ-று.)

ஆகலின் அசத்துமல்லை என்பது குறிப்பெச்சம். எனவே அசத்தைச் சத்துடனின்று நீக்குவதனல் சதசத்தாவை என்பதாம். சட்ட =செம்மையாய். தைவம் =தேவனதுடைமை. வாதனையுமின்றிப் பற்றறக்கழிதலால் பொய்விடும் என்னது "பொய்விட்டுப் போம்" என்றார்.

> கண்டதை யன்றன் றெனவிட்டுக் கண்டசத்தா
> யண்டனை யான்மாவி லாய்ந்துணரப்—பண்டணைந்த
> ஊனத்தைத் தான்விடுமா றுத்தமனி ஞெண்கருட
> சானத்திற் றீர்விடம்போற் றான்.

இவ்வெண்பா அசத்தை அசத்தென்று கண்டு நீங்கும் உபாயமும், நீங்கியபோது உண்மையை (அதாவதுசத்தை) தைவம் (அதா

வது உயிர்) புணரும் விதமும், புணர்ந்தகாலையில் பொய் (அதாவது அசத்து) விட்டுப்போமாறும் தெரித்துணர்த்தி அதனை வலியுறுத்துகின்றது.

(இ-ள்.) கண்டதை அன்று அன்று எனக்கண்டு அசத்துஆய் விட்டு=சுட்டி உணரப்பட்ட பிரபஞ்சத்தை இதுசத்தன்று, இது சத்தன்று என ஒவ்வொன்றாகச்சுட்டி அசத்தாகக்கண்டு விட்டுநீங்கி-ஆன்மாவில் அண்டனை ஆய்ந்து=(அவ்வாறு அறிந்து நீங்கியதன்) அறிவின்கண்ணே (சுட்டுணர்விற்கு விடயமாகாத) முதல்வனை ஆராய்ந்து—உணர=(அச்சிவஞானத்தாலே ஆசாரியன் சிவோயம் எனத்தன்னுள்ளே பாவித்துச் "சிவத்துவமசி" என்றறிவுறுக்கும் சித்தாந்த மகாவாக்கியப் பொருளை நாடோறும் பயின்று "சிவோகம்" எனப்பாவிப்பானாயின்,—உத்தமனின் பண்டு அணைந்த ஊனத்தைத் தான் விடுமாறு=(அந்தப்பாவகத்தின் விளங்கும்) முதல்வனால் அநாதியேகூடிய பொதுவியல்பையும் அதற்கேதுவாகிய மல மாயா கன்மங்களையும், (உயிர்) தான்விட்டுநீங்கும். அப்படி விட்டு நீங்குமாறு (எதுபோலுமெனின்)—ஒண்கருடசானத்தின் தீர் விடம் போல்=ஒள்ளிய கருடதியானத்தில் விளங்குங் கருடனால் அப்பாவகன் விடத்தைத் தீர்த்துக்கொள்ளுமாறு போலாம் (எ-று).

கருட பாவனையாவது—கருடன், ஆதி பௌதிக கருடன் ஆதி தைவிக கருடன் ஆத்தியான்மிக கருடன் என, மூவகைப்படும். அவற்றுள் இவ்வுலகத்தில் காணப்படும் கருடன் ஆதி பௌதிக கருடனும், அதற்கு அதி தெய்வமாய் மாந்திரிகன் உள்ளத்தில் அதுபோல வைத்துத் தியானம்செய்து கணிக்கப்படும் மந்திரம் ஆதி தைவிக கருடனும், அம்மந்திரத்தினிடமாக நின்று மாந்திரிகனுக்குப் பயன் கொடுப்பதாகிய சிவசத்தி ஆத்தியான் மிக கருடனுமாம். அவற்றுள் இங்கே கருடனென்றது கருடனுக் கதி தெய்வமாய் மாந்திரிகன் உள்ளத்திற் காணப்படும் மந்திர ரூபமாகிய ஆதி தைவிக கருடனை. அதனைப் பாவித்தலாவது நாள்தோறும் பயின்று வந்த பயிற்சி விசேடத்தால் அம்மந்திர ரூபமே தானாக அநந்நிய பாவனை செய்து தன் அறிவு அதன் வசமாம்படி உறைத்து நிற்றல். அங்ஙனம் நின்று அம்மந்திரக் கண் கொண்டு பார்ப்பவே அஃது அவ்விஷ வேகத்தை மாற்றுதல் அநுபவமாகலின், அப்பாவனை சிவோகம்பாவனைக்கு உபமானமாகக் கூறப்பட்டது.

புள்ளு விலங்குமரம் முதலிய சராசரங்களுக் கெல்லாம் அதி தெய்வமும் மந்திரமும் உள்ளன என்றும், சார்ந்த பொருள் வண்ணமாகும் இயல்புடைய ஆன்மா அவற்றுள் எவ்வெம்மந்திரங் களைக் கணிப்பினும் அவ்வம்மந்திர சொரூபமாம் என்றும் சர்வ ஞானோத்தர முதலிய நூல்கள் விரித்துக் கூறுகின்றன.

---

## காசிகண்டம்.

## வியாதன் கையுநாவு மெழாதுநின்ற அத்தியாயம்.

---

(48-வது பக்கத் தொடர்ச்சி.)

வேறு.

என்று கூறி முனிவர னேத்தலுங்
கொன்றை வேணிய னின்னருள் கூர்தரத்
துன்று பாவந் தொலைந்தவ னேங்குகை
மன்ற முன்னைய தாக வழங்கிற்றால்.

(இ-ள்.) என்றிந்தவகையாக வியாதமுனிவர் தோத்திரஞ் செய்து துதிக்கவும், கொன்றைமாலையணிந்த சடையையுடைய சங்கரரது இனிமையாகிய திருவருள் மிகுதலால், தன்னை யடைந்த பாவமானது தொலைந்து அவரது தூக்கிய கை நிலைபெற முன்னைய தன்மையாக வழக்கத்திற்கு வந்தது. எ-று.

இவ்வாறே யன்றி, வியாதமுனிவர் செய்த தோத்திரத்திற் களிகூர்ந்த சிவபெருமான் உமாதேவியாருடன் இடபாரூடராய் விநாயகர் - ஸ்கந்தர் - திருமால் - திசைமுகன் முதலிய தேவர்கள் புடைசூழவும் புஷ்பமாரி பொழியவும் காட்சியளித்ததாகவும், அவ்வாறு வருகையில் தமது திருவடியைத் தாங்கிநின்ற திருமாலின் நிலைமையை முனிவர்க்குக் காட்டியதாகவும், சரிதமுளது. இதனை,

காஞ்சிப்புராணம் - சார்ந்தாசயப்படலம்

"எவனைநீ மதித்து நம்முன் சூளுற விசைத்தா யிந்நா
ளவனிதோ காண்டி மற்றெம் மடியிணை தாங்கிநின்றான்
சவலைநீ பேதை நீராற் சாற்றினை யெம்மைத் தேறு
துவலையா மதத்திற் பட்டோ ரிடும்பைநோ யுழப்பர் கண்டாய்-
என்பதனானறிக.

தண்டு ழாய்மணி மாலை தணந்தொளிர்
கண்டி கைத்தொடை சூடிக் களிப்பொடும்
புண்ட ரங்கள் புனைந்து சிவனடித்
தொண்டர் தாண்மலர் சூடின னாடினான்.

(இ-ள்.) குளிர்ச்சிதங்கிய துளபமணி மாலையை நீக்கி, பிரகாசிக்கின்ற உருத்திராக்க கண்டிகையாகிய மாலையையணிந்து, ஆசையுடனே திரிபுண்டரங்கள் (ஆகத்திருவெண்ணீறு) தரித்து, சிவனடியிற் றொண்டர்களாக வுற்றோரது பாதங்களாகிய மலர்களைச் சிரமேற்கொண்டு ஆநந்தக்கூத்தாடினர் (வியாதமுனிவர்.)

அன்று தொட்டெம் மமலனுக் கன்பனாய்
மன்ற வோங்குகண் டாகனன் வாவியிற்
றுன்று தண்கதிர்ச் சோதியி லிங்கமாங்
கொன்ற மைத்துள் ளுவந்தருச் சித்தனன்.

(இ-ள்.) அன்றையதினமுதல் எமது சிவபெருமானுக் கடியவராய், நிலைபெற்றுயர்ந்த கண்டாகனன் தீர்த்தத்திலே, நெருங்கிய தட்பமாகிய கிரணங்களையுடைய சோதிவடிவாகிய சிவலிங்கக் குறியொன்றினைப் பிரதிட்டைசெய்து மனவிருப்புற்றுப் பூசித்தனர் (வியாதமுனிவர்). எ-று.

இன்ன வீசனற் காதை யியம்பினர்
துன்னு பாதகங் கோடி தொகுப்பினு
மன்ன யாவுந் தொலைத்தரன் சேவடி
மன்னி வாழ்குவ ரென்ன வழங்கினான்.

(இ-ள்.) இத்தன்மையான பெருமானது சரிதத்தைச் சொன்னவர்கள், நெருங்கிய கோடிபாதகங்களைச் செய்தபோதிலும், அவற்றையெல்லா மொழித்துச் சிவபெருமானது சிவந்த திருவடிகளில் நிலைபெற்று வாழ்வார்களென்று (ஸ்ரீ ஆறுமுகப்பெருமான் அகத்தியமுனிவருக்கு) அருளிச்செய்தனர். எ-று.

வியாதன் கையுநாவு மெழாதுநின்ற அ-ம்.

முற்றிற்று.

---

## ஸ்ரீ சிவமஹா புராணம்.

## சிவயோக விபூதி யுரைத்த அத்தியாயம்.

வியாஸமுநிவர் ஸநத்குமாரரைநோக்கி ஸ்வாமீ! தேவரீர் முன்னர், பிரமாதிதேவர்களெல்லாரும் பாசுபதயோகத்தை யநுசரித்துச்

சிவகடாக்ஷம் பெற்றுப் பெரும்பதவியி லிருக்கின்றனரெனக் கூறி யிருக்கின்றீராதலின், அடியேன்பேரில் அன்புவைத்து அந்தப் பாசுபதயோகமும் அதனாலடையும் ஞானமும் இத்தகையினவெனத் தயையோடு கூறியருளவேண்டுமெனக் கேட்க, ஸநத்குமார முனிவர் சாற்றலாயினர். வியாஸமுனிவனே! பிரமாதிதேவர்கள் யாவரும் தக்ஷயாகத்தில் வீரபத்திர மூர்த்தியாற் பீடிக்கப்பட்டவர்களாய் மரணமடைந்த பின்னர், உமாதேவியார் சிவபெருமானை வேண்டி யென்காரணமாக இவர்களிறவாது எல்லாரையும் எழுப்பியருளவேண்டு மென, தேவநாயகன் அவ்வாறே யவர்களை யெழுப்பினமையின், உயிர்த்தெழுந்த தேவர்கள் யாவரும் சிவபெருமானைச் சரணமடைந்து, விபூதி தாரணஞ்செய்துகொண்டு சிவபக்தர்களாகவே சிவத்தியானத்தை மறவாது செய்துகொண்டிருப்பது கண்டுமனங்களிகொண்ட அம் மகாதேவன் அவர்கட்குப் பாசுபத யோகத்தை யுபதேசித்தனன். அந்த யோகமானது அநேக ஆயிரம் பிறவியிற் செய்த புண்ணிய பலன்களையெல்லாம் சிவார்ப்பிதஞ்செய்த பரமபுருஷர்கட்கன்றி உபதேசிக்கப் பிராப்தமாகாதது. பாசுபத தீக்ஷையைப்பெற்று, சர்வஜ்ஞானமுற்று, தபோதனர்களுந் துதிசெய்யும் சிவபெருமானை யடையத்தகும். அதர்மத்தாலன்றிப் பாவமும் தர்மத்தாலன்றிப் புண்ணியமுமாகிய பலன்கள் சித்திக்கமாட்டா. இவ்விரண்டும் ஒன்றற்கொன்று பெரிதாக உலகத்தில் அநாதியாயிருக்கின்றன. புண்ணிய பாவ பலன்களில் விருப்புவெறுப்புக்களை யொழித்துப் பாசுபத யோகத்தை யப்பியசித்தவர்கள் அளவிட்டுரைக்க முடியாத அகண்டைசுவரிய மடைந்தவர்களாவார்கள்.

வியாஸமுனிவனே! விபூதியைப் பரிசித்த மாத்திரத்திலேயே அஜ்ஞான பந்தங்களொழியும். அந்தப் பஸ்மதாரணத்தினாலேயே ஜீவன்முக்தனாகிறான். சோமாக்கினியாற் செய்யப்பட்ட விபூதியைத் தரித்த தேவர்கள் அவ்விபூதியின் பிரபாவத்தால் வீரியவான்களாய்ப் பரமாத்மஸ்வரூபியான சங்கரனை ஸ்மரித்து எல்லாப்பாவங்களையு மொழித்துப் பாசுபத யோகஞ்செய்து முக்தர்களானார்கள். தேவர்கள் யாவரும் சோமத்தாலுண்டானவர்களும் பிதிரர் யாவரும் அக்கினியா லுண்டானவர்களுமாதலின், உலகமுழுதும் அக்கினி ஸோமாத்மகமா யிருக்கின்றது. சாம்பசிவனே அக்கினியும் சோமமுமாக விளங்குகின்றான். அக்கினி சொரூபமும் சோம

சொரூபமுமாகிய சிவபெருமானது தேஜஸே விபூதியாம். அவ்வகைய் விபூதியை யணிந்தவர்கள் எல்லாப்பாவங்களையு மொழித்து முக்தர்களாவார்கள், வைதிகாசாரமும் சாங்கியாசாரமும் ஞானமும் தவமும் சிறந்ததருமங்களும் ஆதியவற்றை விட்டுவிடினும் அதர்ம ரூபியாயிருப்பினும் அநேக தர்மங்களில் அவாவுடையவனாயினும் விபூதி ஸ்நானமாத்திரத்தாலேயே பரமசிவனுடைய பாதாரவிந்தங் களை யடைவான். பஸ்மதாரணை செய்தவுடனே முன் சிவபக்தி யென்பது சிறிது மில்லாதவனாயினும் அதி சீக்கிரத்தில் சமுசாரபந் தங்களினின்றும் விடுபட்டுச் சிவபக்தியை யிடைவிடாதடையத் தக்க நன்மனமடைவான். இவ்வகையாகவே பூர்வம் திடசித்த முடையவர்களாய் அநேகர் பாசுபதவிரதத்தை யாசிரயித்து நற்கதி யடைந்தார்கள். ஆதலின் சிவசம்பந்தமான இந்தவிஷயம் பரம ரகசியமும் அதியவசியமுமானது. இதனை யாவரும் அப்பியசிக்க வேண்டியது. ஞாதுரு ஞானஞேயங்களாகிய மூன்றும் சரீரத்திற் பரமாத்மஸ்வரூபமாய் நாடிகளில் வ்யாபரிக்கின்றன. பாலிற்கலந் துள்ள நெய்யைப்போலப் பூதங்களிலெல்லாம் பரமாத்மா சூக்கும ரூபமாக வியாபித்திருக்கின்றான். ஆதலின் தன்னிடத்துள்ள பர மாத்மஸ்வரூபத்தை யுணர்வதனாலேயே முத்திகைகூட்டும். அந்தப் பரமாத்மாவை ஞானத்தாலேயே யடையவேண்டும். ஞானத்தா லன்றி உருவமும் ஓசையும் முதலியன ஒன்றுமில்லாத ஜகதீசனைப் பிறிதொருவகையாலுங் காணமுடியாது.

வியாஸ முனிவனே! சொரூபாதீதனாகிய பகவானுடைய குணானுபவங்களை அவ்விறைவனுடைய அநுக்கிரகத்தால் அறியத் தக்க ஒருஉபாயஞ்சொல்கின்றேன். இவ்வுலகமானது ஓர் காலத்திற் சூனியமாயிருந்த தன்றோ? அப்பொழுது தேவர்கள் அசுரர்கள் நதிகள் சூரிய சந்திரர்கள் முதலிய ஒன்றுங் காணப்படவில்லை யன் றோ? அப்பொழுது சுத்த புத்த சச்சிதானந்த பரப்பிரமஸ்வரூப மொன்றே சேஷித்திருந்தது. அவ்வஸ்து அழிவற்றதும், மாத் திராதீதமும், நிர்விகாரமும், நிரஞ்சனமும், உள்ளும் புறமும் விளங்குவதும், சுயம்பிரகாசமும், விகாரரகிதமும், பரமும், நித் தியமும், ஞானசொரூபமுமானது. அந்தப் பரமான பொருளி லிருந்து ஓம் என்பது பிறந்தது. அவ்வோங்காரமும் மூன்று மாத் திரைகளின் அளவுள்ளதும், மூன்று எழுத்துக்களின் வடிவானது மாம். அதுவே பரப்பிரமம். அவ்வோங்காரத்திலுள்ள அகார

வுகார மகாரங்கள் திரிமூர்த்திகளும், மாத்திரை பிரகிருதியுமாம். சர்வேசனுகிய சிவபெருமான் அந்தப் பிரகிருதியைப் பாரியையாகக் கொண்டிருக்கின்றுன். அகார உகார ஸ்வரூபிகளான பிரம விஷ்ணுக்கள் ஈச்சுரஸப்த முடையர்களாகவே விளங்குவர். மாயோபாதியையுடைய அப்பிரம விஷ்ணுக்களையும் மாயையாகிய பிரகிருதியையும் மயாரஹிதமாகிய சுத்தசிவம் தன்னிடத் தொடுக்கியும் மீண்டும் படைத்தும் அவர்களால் உலககாரியங்களை நடத்தி வருவது இயற்கை.

வியாஸ முனிவனே! இது பரமரகசியமானது, அழிவில்லாதது. உன் விஷயத்திற் கிருபையுடையவனுகக் கூறினேன். இவ்வகைய ஒங்காரஸ்வரூபமான பரமமந்திரத்தை யாவனெருவன் தியானஞ் செய்தானுயினும், கிருதார்த்தனுய் முக்தனுவான். பிறமதங்களிற் பிரவேசித்தவர்கள் முக்தியடையார்கள். பாசுபதயோகத்திற் பிரவேசித்துள்ள புண்ணியர்கள் பாலினுள்ள நெய்யைப்போலக் கலந்துள்ளதும், பிரகிருதியைக்காட்டிலும் பரமானதும், தத்துவ சொரூபத்திலுள்ளதும், ஒங்காரஸ்வரூபமாக விளங்குவதுமாகிய தமது சொரூபமே பரசிவமென் றுணர்ந்தவர்களாய்ச் சமுசார பந்தங்களையொழித்துச் சிவாநுக்கிரகத்தால் முக்தியடைவார்கள். பிரகிருதியோ ஈசுவரனன்று; குணபேதங்களைப் பொருந்தியுள்ளது; அநேக ரூபங்களையுடையது; வியாபகமாகவுள்ளது; யானென்னும் அபிமானத்தால் சிருட்டியெனப் பெயருடையது; அவ்வகைய மாயைக்கு நாயகனுகவுள்ளவன் மகேசன். அப்பிரகிருதியானவள் எட்டுப்புயங்கள் மூன்றுகால்கள் ஐந்துமுகங்கள் மூன்றுவிழிகள் ஐந்துதொழில்கள் இந்திரியாதி எழுபுரவிகள் பூட்டியதேர் முதலியவற்றுடன், உலகுக்குத்தாய் போனின்று, சத்வாதி குணங்களாற் பிறந்து, வித்தை அவித்தையென்னும் இருவடிவாகி விளங்குவள். அம்மாயையினுலேயே பிரபஞ்ச முழுது முண்டாயது. நிர்க்குணமான பரசிவத்தினின்று ஒங்காரந் தோன்றியது. அப்பரசிவமும் ஒங்காரத்திலேயே விளங்கும். மகாயோகிகளான கபிலர் முதலானேர் பாசுபதத்தையநுசரித்து நிர்விகற்ப சமாதியிலிருக்கிறுர்கள். நிர்க்குணமான பரப்பிரமமே எல்லாவற்றிற்குங் காரணமாக விளங்கும். பிரமவிஷ்ணுவாதியர் பிரகிருதி சம்பந்தமும் மாயா விசிஷ்டமுமுற்று ஒங்காரத்திலே தோன்றிக் குணுத்மகர்களாய்த் தேவயஜ்ஞ நாமங்களுற்று, தர்மாதர்ம பந்தமற்று, மோக

விசிஷ்டர்களாயினும் ஞானவான்களாய், தேவர்களாக விளங்குவர். ஈசுவர மகாத்மியத்தாற் பிரகிருதி அவரிடத்திலேயே லயமாகின்றது. அப்பிரகிருதிக்கு ஈசுவரனைப் பந்திக்குஞ் சக்திகிடையாது என்னும் விவரங்களைத் தியானயோக முணர்ந்தவனே யறிந்து சமுசார சாகரத்தை நீந்தியோக்ஷக் கரையைக் காண்பான்.

## சந்தியாவந்தனம்.

(யாழ்ப்பாணம் "ஞானசித்தி" ப்பிரசுரம்.)

சந்தியாவந்தனம் என்பது-செவ்வையாகத் தியானித்து வழிபடுதல் என்னும் பொருளுள்ளது.

சம்-செவ்வே. தியா-தியானித்தல், வந்தனம்-வழிபாடு.

இச்சந்தியாவந்தனம் சைவர் வைணவர் ஸ்மார்த்தர் மாத்துவர் என்னும் நால்வர்க்கும் பொதுநோக்கில் ஒன்று போலிருப்பினும் சிறப்புவகையில் வெவ்வேறாயிருக்கும். அவ்வவர் முத்திநிலை வெவ்வேறுவகைப்படுதலே அதற்குக் காரணமாம்.

சைவசந்தியாவந்தனம் சிவாகமப்படிசிவதீக்ஷைபெற்றோரால் அநுட்டிக்கப்படுவது. அதன்கருத்தென்னவெனில், ஆசிரியனாலே தனக்குக்கொடுக்கப்பட்ட சிவத்துவத்தை அநுபூதியிற்கொண்டு வருதலாம். இது முத்தியடைதற்கு உபாயமாயிருக்கும். அது எங்ஙனமெனில், ஒருவன் தன்னை எப்பொழுதும் சீவனாகவே பாவித்துவருகிறான், உண்மையில் அவன் சீவனன்று; ஆன்மாவாம். ஆன்மா சைதன்னியப்பொருள். எங்கும்வியாபகமானது. ஆயினும் ஆணவமலசம்பந்தத்தால் அறியாமையெய்தி அம்மலத்தின் குணமே தன்குணமாகக்கொண்டு ஒன்றுமறியாதிருந்தது. பின் அம்மலமேதுவாக மாயை கன்மங்களையும் அடையலாயிற்று. மாயாகாரியமான சூக்குமசரீரத்தை யடைந்தபொழுது சீவன் எனப்படுகின்றது. ஆதலால் அச்சீவநிலை உபாதியேயன்றி உண்மையன்று. அவ்வுபாதி நீங்கவேண்டின் உண்மைநிலையைக் கடைப்பிடிக்கவேண்டும். ஆன்மா மலச்சேர்க்கையோடு இருக்கிறவரையில் உண்மைநிலை கைவரமாட்டாது. அதனால் மலம் ஒழியவேண்டியது அவசியமாகிறது.

மல ஒழிவுமாத்திரமன்று. அம்மலம் மீளவும் பந்தியாமலுமிருக்கவேண்டும். மலம் தானாக நீங்காது. ஆன்மா பந்தமுற்றிருப்பதால் அதுவும் மலத்தை நீக்கிக்கொள்ளமாட்டாது. முதல்வன் அநாதியாகவே பந்தமடையாதவன். மலம் அவனைப்பந்திக்கமாட்டாது. அவனுடையசத்தியின்முன்னே மலசத்திமுனைத்துநில்லாது. ஆதலால், அவ்வளவிலாற்றலுடைய அவனே அம்மலத்தை நீக்கிக்

காக்கவல்லவனுவன். அவனுடையசக்தியே மலத்தையொழிக்கவல்லது. அவனுக்கு இரண்டு சத்திகளுள்ளன. ஒன்று கிரியாசத்தி. மற்றென்று ஞானசத்தி. கிரியாசத்தி மலத்தைப்போக்கும். ஞானசத்தி சிவத்தையளிக்கும். அதாவது சிவத்துவத்தையுண்டாக்கும். அந்த இரண்டு சத்திகளையும் சந்தியாவந்தன கிரியையினுலே நாம் பாவித்து அடைகின்ருேம். மலத்தைவெல்லும் சிவத்தின் சத்தி நம்மிடத்தே தங்கினுல் நாம் சிவவடிவமாவோம். சிவத்துவ மடைந்த நம்மை மலம்பந்திக்கமாட்டாது. இதுவே சந்தியாவந்தனத்தின் தாற்பரியமாம்.

ஆசாரியர் சிவதீக்ஷாகாலத்திலே மலசத்தியைக் கெடுத்துச் சிவசத்தியை நம்மிற் பதிக்கின்ருர். அவ்வாறு பதிந்தசத்தியை மேலும்மேலும் வளர்த்துப் பரிபூரணமாக்கிக்கொள்வதே சந்தியாவந்தனக் கிரியையாம்.

சந்தியாவந்தனத்திலே சலசுத்தியென்பது முதலாங்கிரியை. சலசுத்தியாவது சலத்திலே சிவத்தின் கிரியாசத்தியைப் பதித்தலாம். இரண்டாங்கிரியை அஸ்திரசந்தியோபாசனம். அஸ்திரசந்தியோபாசனமாவது சூரிய மண்டலத்திலே சர்வகர்ம சாக்ஷியாய் விளங்கும் சதாசிவ மூர்த்தியை வழிபட்டு அவருடைய அருளினுலே சர்வதத்துவங்கள் புவனங்களில் நிறைந்திருக்கும் பாவ புண்ணிய கர்மங்களை நீக்கிக்கொள்ளுதலாம். அதனுல் ஆன்மாவைப் பந்தித்த கன்மமலம் நீங்கும். மூன்ருங்கிரியை ஆசமனம். இது ஆன்மாவைப் பந்தித்த மாயாமலத்தை யொழித்தல். மாயை கன்மத்துக்குத் தாரகமாய் அவ்வக்கன்மங்களுக்கு ஏற்பத் தநு கரண புவன போகங்களாய் விரிந்திருக்கும். அத்தநுகரண புவனபோகங்கள் சுத்தமாயையின் காரியமாகிய சிவதத்துவங்களினும் அசுத்த மாயையின் காரியமாகிய வித்தியா தத்துவங்களினும் பிரகிருதி மாயையின் காரியமாகிய ஆன்மதத்துவங்களினும் விளைவுற்றிருக்கும். ஆன்மா கன்மாநுசாரமாக அத்தநுகரண புவனங்களையடைந்து சுகதுக்க போகங்களை நுகரும். இங்கு அப்போக நுகர்ச்சிக்கு ஏதுவாகிய கன்மம் அஸ்திர சந்தியோபாசனத்தால் ஒழியவே அதற்குப் பற்றுக்கொடுத்து நின்ற மாயையும் ஒழியுமாதலால் ஆன்மதத்துவம் வித்தியாதத்துவம் சிவதத்துவம் என்னும் மூவகை முப்பத்தாறு தத்துவங்களையும் சுத்திசெய்து ஒழித்தலே ஆசமனகிரியையாகின்றது. கிரியாசத்தி விருத்தியினுலேயே கன்ம மாயைகள் ஒழியவேண்டுதலின், அக்கிரியாசத்தி வடிவாய் விளங்கும் தீர்த்தம் அதற்கு உபகரணமாகின்றது.

இதற்கு உபகரணமாகும் பொருட்டே கிரியாசத்தியைச் சலத்திற் பதிட்டை செய்யப்பட்டதென்பதும் நினைவிலிருக்கவேண்டும்.

இனி, கன்மமும் மாயையும் ஒழிந்தபின்னர் ஆன்மாவைவிட்டு ஒழியவேண்டுவது ஆணவமலம். அவ்வாணவமலம் பராசத்தியால் ஒழியத்தக்கது. அதனால் அப்பராசத்தியை விபூதியிலே பதிட்டை செய்து அவ்விபூதியைப் பராசத்தி வடிவமாகப் பாவித்து அணிந்து கொள்ளின், அப்பாவனை விசேடத்தால் ஆன்மாவிடத்துப் பராசத்தி விளக்கமுற்று ஆணவமல இருளையகற்றுதல் செய்யும். அதனால் ஆணவமலம் நீங்கும். ஆன்மா இம்மும்மலமும் நீங்கி முத்தனாவன். இங்கு கிரியாசத்தி வடிவாய்நின்ற ஆதிசத்தி நீக்கியது கன்மமாயைகளையென்றும் ஞானமே வடிவாயுள்ள பராசத்தி நீக்கியது ஆணவமலத்தையென்றும் அறியத்தக்கது. இப்பாவனையை எப்பொழுதும் பயின்றுவரின் அச்சத்திகள் கிரமக்கிரமமாக மேற்பட்டு உண்மையாகவே மலநீக்கஞ் செய்யுமென்பதில் ஐயமில்லை.

அதன் பின்பு சகளீகரணம் செய்யப்படும். சகளம்-வடிவம். கரணம்-செய்தல். மலவடிவு நீங்கிய உயிருக்குச் சிவவடிவு உண்டாக்கல் சகளீகரணமாம். அச்சகளீகரணம் பலவகைப்படும். அவை தீக்ஷைக்கு ஏற்பத் தான்பெற்ற வடிவு எதுவோ அதனைப் பாவிக்கும் வேறுபாடுடையது.

சமயதீக்ஷிதர் உருத்திரவடிவம் பெறுவர். விசேடதீக்ஷிதர் சதாசிவவடிவம் பெறுவர். லோகதர்மிணிநிருவாணதீக்ஷிதர் மகாசதாசிவவடிவம் பெறுவர். சிவதர்மிணி நிருவாண தீக்ஷிதர் சுத்தமாய் விளங்கும் சச்சிதானந்த சிவவடிவம் பெறுவர்.

இந்நிலைகளுக்கு ஏற்பவே சகளீகரணமுஞ் செய்யப்படும்.

முதல்வன் உயிர்கள் பொருட்டுச் சிவசத்தி வாயிலாக ஏற்கும் சரீரங்கள் மந்திரசரீரங்களேயாதலால், அவ்வடிவு மந்திரங்கொண்டு பாவிக்கப்படுகின்றன.

உருத்திர வடிவு பெற்ற சமயதீக்ஷிதர் அங்கமந்திரங்களால் நியாசஞ்செய்யவேண்டும். சதாசிவ வடிவுபெற்ற விசேட நிர்வாண தீக்ஷிதர்கள் பஞ்சப்பிர்மஷடங்கமந்திரங்களால் நியாசஞ்செய்யவேண்டும். சிவவடிவெய்திய சிவதர்மிணி நிர்வாணதீக்ஷிதர் ஐந்தெழுத்தினால் நியாசஞ்செய்யவேண்டும். அவ்வம் மந்திரப் பொருளாயுள்ள சிவபேத வடிவங்களைத் தாம் பதித்தலே அவ்வேறுபாட்டுக்குக் காரணமாம்.

இப்படி மந்திரநியாசஞ் செய்து பயின்று வருதலினாலே அவ்வடிவு ஆன்மாவிற் பதிந்து ஆன்மா சிவசொரூபியாவன்.

அதன்பின்பு ஆன்மாவைச் சுத்தமாகிய சிவத்தோடு சேர்த்தல் பிராணயாமமெனப்படும். பிராண ஆயாமம்- பிராணனைத்தடுத்தல். இடைகலை பிங்கலை வழி யியங்கும் பிராணவாயுவைத் தடுத்துச் சுழுமுனையில் நிறுத்தவே கருவிகரணங்கள் தொழிற்படாதொழி யும். மனம் ஒடுங்கும். ஆன்மா அவற்றின் சேர்க்கை யை விட்டு அப்பாற் சென்று சிவத்தையடையும். சிவம் ஆறுதாரங் களையுங் கடந்து அப்பாலுள்ள தாகலின், ஆறுதாரங்களோடும் கருவிகளோடு கூடிச் சிவிக்குமான்மா, அவற்றினீங்கி அதீதமா யுள்ள சிவத்தையடைதல் அப்பிராணயாமத்தின் பயனும். இதினும் மந்திரவேறுபாடு பாவனைவேறுபாடு முன்சொன்னபடி கொள்ளப் படும்.

அதன்பின்பு செய்யப்படுவது சந்தியாத்தியானம். காலை மத்தியம் மாலை இரவு என்னும் வேறுபாடுகளுக்கு ஏற்பச்சிருட்டி திதி சங்காரம் திரோபவம் அநுக்கிரகம் என்னுங் கிருத்தியங்களைச் செய்துகிற்கும் பிராமி முதலிய சிவசத்திபேதங்களைத் தியானித்து அச்சத்தியின் பூரணப்பிரகாசத்துள் ஒடுங்கி அவ்வண்ணமாதல் சந்தியாத்தியான அபிப்பிராயமாம்.

அதன்பின்புகாலந்தோறும்ஈட்டப்படும்தூலசூக்குமவினைகளை யொழித்தல் மார்ச்சன அகமர்ஷணங்களாம்.

அப்பால் ஆதித்த மண்டல மத்தியில் விளங்கும் சிவபேத வடி வினை அவரவர் தியானிக்கும் வடிவாக வழிபட்டு நீரினலே தருப்ப ணஞ்செய்தல் சந்தியாவந்தனமாம். தேவர், முனிவர், மனிதர், பூதங்கள், பிதுர்க்கள் என்னும் ஐவரைச் தருப்பணவாயிலாக வழி படப்படும். தருப்பணம்-உவப்பித்தல். வழிபட்டு உவப்பித்தலே இவ்வந்தனத்தின் நோக்கமாம்.

இவ்வழிபாடு புண்ணியமாகி அப்புண்ணியத்தினலே அருள் மேலிட்டு அதனல் முத்தி சித்திக்கும்.

இவ்வாறு மலநீக்கமுஞ் சிவப்பேறுமாகிய பிரயோசனம் இச் சந்தியாவந்தன கிரியையினலே வாய்க்கின்றது.

மலச்சார்பினலே தன்னைச் சீவனென்றெண்ணிச் சனனமரணப் பட்டு இன்பத்துன்பநுகர்ந்து துயருறும் ஆன்மா, காலந்தோறும் அநுதினமும் மலநீக்கம்பெற்றதாகவும்சிவத்துவ மடைந்ததாகவும் சிவமாகவும் பாவித்துவரின் அப்பயிற்சி வசத்தினலே சீவ னென்னுமுணர்வினீங்கிச் சிவமென்னும் உணர்வு தலைப்பட்டு அவ் வுணர்வே மறுமைக்கும் வித்தாய் முத்திக்கு ஏதுவாமென்றல் சந்தியாவந்தனத்தின் அந்தரங்க அப்பிராயமாம்.

நம்மவரில் அநேகர் அருமையாகிய மனிதப்பிறப்பை எடுத்தும் இச்சந்தியாவந்தனவாயிலாகச் சிவவடிவெய்தி முத்தியடைய விரும்பாமல், உலகமோகங்களுள் மூழ்கி எப்பொழுதும் சீவபாவனையே செய்து மோசம்போகின்றார்களே! இஃது எவ்வளவு அறிவின்மை!!

## ஸ்ரீ ஹரதத்தாசாரிய சுவாமிகள் சரித்திரம்.

(38-வது பக்கத் தொடர்ச்சி.)

ஒருநாள் அக்கினீசுவரர் ஆலயத்துக்குத் திருத்தொண்டு செய்யும் சில கணிகையர் ஓர்நாள் இராத்திரி கோவிற்றிருத்தொண்டுக்கு வாராமையால் கோயிலதிகாரிகள் அவர்களை மறுநாட் காலையில் வருத்திக் கோவில் மண்டபத்தின்மேலே வெய்யிலில் நிறுத்தி மலசல மோசனமின்றிப் பசியோடு வருத்தும்படி பிடித்தார்கள். மத்தியானமாயும் வீடுபோகப்பெறாமல் இங்ஙனம் பிடிக்கப்பட்டு அவர்கள் அழும்போது, வழக்கமாய்த் தான் வரும் காலந்தப்பி மத்தியானத்துக்குப் பின் அரதத்தாசாரியர் ஆலய சேவையின்பொருட்டு அங்கே எழுந்தருளினார். அந்தக் கணிகையர் ஆசாரியரைத் தரிசித்து அத்துன்பத்தினின்று தங்களை விடுவிக்கும்பொருட்டு அழுது பிரார்த்தித்தார்கள். அப்பொழுது அவர் பக்கத்தினின்றவர்கள் வாயிலாக அக்கணிகையர்க்குநிகழ்ந்த சமாசாரத்தைக் கேட்டுத் தாம் பூமியிலே வீழ்ந்து தமமுடைய வயிற்றிலே அடிக்கடி மோதி, சிரசிலும் மோதி அழுது மூர்ச்சையினாலே நிலத்திலே விரைவில் வீழ்ந்தார். சிலர் அவர் நிலைமை நோக்கிப் பரிகசித்தார். வேறு பலர் இவர் இங்ஙனஞ்செய்தலை நிச்சயித்தறிதற்கு நமக்கு வன்மையில்லை என்றார்கள். அப்போது கோவிலதிகாரிகள் அங்கு வந்து நீங்கள் என் இப்படி வருந்துகின்றீர்களென்று அவரைப் பிரார்த்திப்ப, அதற்கு அவர்கோவிலுக்குவந்து சேவிக்குமாறு தண்டிக்கப்பட்டகணிகையருடைய பாக்கியமன்றோ பாக்கியம்! இந்தப்பிரகாரம் ஆலய சேவைக்கு என்னை வந்திலை என்று பிடித்து என்னைக் கண்டிக்க எனக்கு அதிகாரி ஒருவருமில்லையேயென்று வருந்துகிறேன் என்றார். இந்த வார்த்தையைக் கேட்டு அதிகாரிகள் அக் கணிகையரை விடுதலை செய்தார்கள். அக்கணிகையரெல்லாம் அரதத்தாசாரியரை மிக மகிழ்வினோடு வாழ்த்தினார்கள். ஆசாரியரும் சிவதரிசனஞ் செய்துகொண்டுகிருகஞ்சார்ந்து சிவபூசை செய்ய ஆரம்பித்தார்.

அப்போது இருஷிகள் உபமன்யு முனிவரை நோக்கி, அரதத்தாசாரியசுவாமிகள் பிராதக்காலத்தில் சிவசேவைக்கு எழுந்தருளி

யிருப்பாரேல், கணிகையர் தம் விருத்தாந்தத்தை அவருக்கு விஞ்ஞாபனஞ் செய்திருப்பாரே. அங்ஙனம் அன்றைக்கு அவர் வாராமைக்குக் காரணம் என்னை என்று கேட்டார்கள். ஆசாரியரைக் கணிகையர் காலைப்போதிலே தரிசித்தும் தங்களை அதிகாரிகள் விரைவிலே விடுதலை செய்வார்களென்றெண்ணி அதைக் குறித்து அவருக்கு விண்ணப்பஞ் செய்திலர் என்று முனிவர் சொன்னார். அங்ஙனமாயின் திருவிடைமருதூரைத் தரிசித்துக்கொண்டு சீக்கிரத்திலே அக்கினீசுவரர் ஆலயத்துக்கு வாராது அவர் காலந்தாழ்த்து மத்தியான்னத்துக்குப் பின்வரவேண்டியகாரணம் என்னை என்று இருடிகள் கேட்ப, முனிவர் சொல்வாராயினர்.

பௌர்ணமாசை காலத்திலே அரதத்தாசாரியர் பிரமகத்தி நிவாரணஞ்செய்யும் காவேரி தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து, மத்தியார்ச்சுனேசுவரரையும் ஆஞ்ஞா கணேசரையும் கற்பகநாயகியையும் பிறரையுந் தரிசித்துக்கொண்டு மத்தியானப்போதிலே தமது கிருகத்துக்குவந்து, மாத்தியான்னிகஞ் செய்து சிவலிங்கப் பெருமானுக்குப் பூசைசெய்யத் தொடங்கி, அவருக்கு அபிஷேகஞ்செய்யும்போது, நாயொன்றுதாகமேலீட்டினாலே அந்தத்தாராபிஷேக சலத்தை ஏந்திச் சாப்பிடுமாறு நாக்கை நீட்டிற்று. அப்போது ஆசாரியர் அந்தச் சங்காபிஷேக சலத்தை அந்த நாயின் நாவிலே விட்டு எஞ்சிய சலத்தைச் சிவலிங்கப்பெருமானுடைய சிரசின்மீது அபிஷேகஞ் செய்தார். சமீபத்திலே நின்றோர் ஆச்சரியத்தோடு அதனை நோக்கி இங்ஙனஞ் செய்யலாமா? இங்ஙனஞ் செய்ததற்குக் காரணம் யாது என்று கேட்டார்கள். அதற்கு ஆசாரியர் என்மாட்டுள்ள அன்பினாலே சிவபெருமானே இந்த நாயுருவத்தோடு எழுந்தருளினால் யான் என்னசெய்யத் தக்கது! என்று சொல்ல, அவர்கள் ஆசாரியருக்குச் சிவபெருமானிடத்திலே திடமான அன்பு இருந்தவாறு என்னை! என்னை!! என்று சொல்லி சிவபூசாதரிசனஞ் செய்துகொண்டு தத்தம் வீடு சார்ந்தார்கள்.

அரணியில் அக்கினி அமைந்தாற்போல அவருடைய பத்தினியார் கர்ப்பமுடையாரயினர். அக்கருப்பம் மாதந்தோறும் விருத்தியாக, ஆறும் மாசத்திலே சீமந்தாதி கருமங்கள் நடத்தப்பட்டன. உமாதேவியார் சுப்பிரமணியரைப் பெற்றாற்போல, அவர் பத்தினியார் ஓர் குழந்தையைப் பெற்றெடுப்ப, அக்குழந்தைக்கு அக்கினீசுரன் என்று நாமகரணஞ் செய்தார். அதன்பின்னர் அவருக்குப் பின்னரும் எழுபுத்திரர்கள்பிறந்தார்கள். அவர்களுக்குமுறையே மகாதேவர், நீலகண்டர், சங்கரர், சந்திரசேகரர், சம்பு, மத்தியார்ச்சுனேசுவரர், கோவடுநாயகர் என்று நாமகரணஞ்செய்தார். அவர்களோடு கற்பகை, மீனாட்சி என்னும் இரு புதல்விகளும்பிறந்தார்கள். அவர்களெல்லாஞ் சிவநேசச் செல்வர்களாய், விபூதி உருத்திராட்ச

தாரணர்களாய், சிவலிங்கார்ச்சனர்களாய், சதாகாலமும் ருத்திர செபஞ் செய்பவர்களாய், பஞ்சாட்சர செபப்பிரியராய், பிதாவுக்குத் தொண்டு செய்யுங் காதலுடையராய், சற்கன்மநிரதராய், வேத சாஸ்திர பாடகர்களாய் ஒழுகினர்கள். இவர்களோடு ஆசாரியர் கிரகஸ்தாச்சிரமத்தில் ஒழுகிப் புத்திரர்களை வைதிக நெறியிலே சிவாஞ்ஞையினாலே செலுத்தி, இரு கன்னியர்களையும் விவாகஞ் செய்துகொடுத்து அன்பினோடு மூன்று காலமுஞ்சிவார்ச்சனைசெய்துகொண்டு வந்தார்.

ஓர் நாள் சிவலிங்க பூபதியானவர் அக்கினீசுவரப் பெருமானுக்குச் சமர்ப்பிக்கும்பொருட்டு மிக விலையேறப்பெற்ற பீதாம்பரம் ஒன்றை ஆசாரியர் சமுகத்துக்கு ஓர் பிராமணர் வாயிலாக அனுப்பினர் பிராமணர் பீதாம்பரங் கொண்டுவந்தகாலம் ஆசாரியர் அக்கினியிலே ஓமஞ் செய்யுஞ் சமயமாயிருந்தது; அப்பிராமணர் வந்து அவர் பாதயுகளங்களிலே வணங்க, ஆசாரியர் அவரை யெழுந்திருக்குமாறு செய்து ஆசீர்வாதஞ்செய்து அவர் இருக்குமாறு ஆசனங் கொடுத்தார். அவர் ஆசனத்திருந்துகொண்டு பீதாம்பரத்தை எடுத்து ஆசாரியர் கையிலே கொடுத்து, அரசர் இதனை அக்கினீசுரருக்கு அர்ப்பணஞ்செய்யச் சொன்னார் என்றுரைத்தனர். அப்போது ஆசாரியர் அக்கினீசுவரப் பெருமானை அவ்வக்கினியிலே தானே சிந்தித்துக்கொண்டு அதனை அவ்வக்கினியிலே ஆகுதிசெய்துவிட்டார். அவ்வக்கினியிலே இட்ட க்ஷணப்போதிலேதானே பீதாம்பரம் பஸ்மீகரமாய்ப் போய்விட்டது அதைக் கண்ட விப்பிரர் அவரிடத்திலே விடைபெற்றுக்கொண்டு அவ்விடம் விட்டு நீங்கி, இராசாவை அடைந்து நடந்த சமாசாரத்தை அறிவித்தார். இதைக்கேட்ட அரசன் நமது ஆசாரியர் சர்வஞ்ஞரன்றோ. யாது காரணத்தினால் தகித்தாரோ என்று சிந்தித்து, அதன் உண்மை அறியும்பொருட்டு ஆசாரியரிடத்தில்வந்து அவருடைய திருவடிகளிலே சுவர்ன புஷ்பங்களினால் அர்ச்சித்து, ஆனந்தபாஷ்பம் வாரா நிற்ப வீழ்ந்து நமஸ்கரித்தார். அவ்வரசரை ஆசாரியர் தம்முடைய திருக்கரத்தினால் எடுத்து அவர் தம்மைப் பூசித்த மகிழ்வினால் அவர் க்ஷேமத்தை விசாரிக்க, பூபாலர் ஆசாரியரை நோக்கி, சுவாமி தங்களுடைய தர்மாதிகளுக்கெல்லாம் பயனும், பாவங்களாகிய வனமையைத் தகிப்பதாயுமுள்ள தங்களுடைய கருணாசாகரத்தில் அமிழ்ந்தின எனக்குத துக்கமென்னுளது! அடியேன் கொடுத்தனுப்பிய வஸ்திரம் பரமேசுரனுக்கு அர்ப்பணஞ் செய்யப்பட்டதா என்றார். அதற்கு ஆசாரியரும், பரமேசுரனுக்கு அர்ப்பணஞ்செய்தேமென்று அரசருக்குச்சொல்லி, அவரைக் கோயிலுக்கு அழைத்துக்கொண்டுபோய்ச் சிவலிங்கப் பெருமான்மீது அவர் வஸ்திரம் தரிக்கப்பட்டிருத்தலை அரசருக்குத்

தரிசிப்பித்தார். அரசரும் தான் கொடுத்த வஸ்திரமே அங்ஙனம் அலங்கரிக்கப்பட்டதென்றுகண்டு ஆச்சரியமுற்று, ஆசாரியருடைய பாதங்களிலே வீழ்ந்து வணங்கி, எனது அபராதத்தை க்ஷமித்தருளவேண்டும் என்று பன்முறை பிரார்த்தித்தார். பாலியதசையிலே தங்களுடையமகிமையைக்கண்டிருந்தும்மயங்கிப்போனேனே என்று ஆனந்தக்கண்ணீரோடு பாராட்டினர். அப்போது ஆசாரியர் அரசனை நோக்கி, நமக்கு ஆசாரியர் மீதும் சிவபிரான்மீதும் அன்பானது சமமாய் உளதாக என்று ஆசி கூறி, அவர் நெற்றியிலே விபூதிதரித்து, நீவிர் நமது பட்டணஞ் செல்வீராக என்று சொல்லி விடைகொடுத்தார். அப்போது அரசரும் மகிழ்வினோடு குருவினுடைய பாதாரவிந்தங்களிலே அநேக இரத்தினாபரணங்களையும வஸ்திரங்களையும் சமர்ப்பித்து நமஸ்கரித்து விடைபெற்றுத் தன் நகரமடைந்தார். ஆசாரியர் கணபதி சுப்பிரமணியரோடு; அம்பிகாபதியாகிய சிவபெருமானைச் சிவபூசாதி சற்கருமங்களினாலே வழிபட்டுக்கொண்டு வருவாராயினர்.

(இன்னும் வரும்.)

---

## அர்ச்சாதீபம்.

(36-வது பக்கத் தொடர்ச்சி.)

விக்கிரகத்துக்குத்தான் ஹேயங்கூறினோம். வேறுவழிக்கும் ஹேயமுண்டோவெனின், எந்தவழியும் ஹேயமே! எங்ஙனமெனின், பரனே உயர் ஒப்பில்லாதவன். பரனில் வேறிட்ட பொருள்கள் பரனாகா. அவனுக்கு ஒப்புமகா. இங்ஙனமாக எந்தப் பொருளில் பரனைப் பாவிக்கலாம்? அல்லது பரனாகவே கொள்ளலாம்? மனசினால் சிவனைத்தியானிக்கிறதென்றும், மனசில் சிவனைப் பாவிக்கிற தென்றுங்கொள்வாமெனின், மனம் என்ன வியற்கையுடையது? அது காரணமா, காரியமா? ஸத்தா, அஸத்தா? சித்தா, அசித்தா, சுகமா? துக்கமா? மாயையி னுண்டாகையால் காரியமும், அதனிடத்து மீண்டும் லயித்தலால் அஸத்தும், ஆன்ம சம்பந்தமின்றி அறியாமையால் அசித்தும், இருவினைகளையீட்டி விகாரித்தலால் துக்கமும்ஆகும். இத்தகைய மனசுக்கு எப்படியோ சிவம் விஷயமாகும்? இவ்வுண்மைபற்றியேயன்றோ மனசுக்கு எட்டாது, மனசால் எட்டமுடியாது என்று சிவத்தை வேதாதிகள் விதந்தன? மனசால் எட்டமுடியாமையைக் கவனியாமல், விக்கிரகத்தால் சிவனை எட்டலாமா வென்று கடாவுவது சிரிப்பாக முடிந்தது.

நம்மவர் உதகரித்த கேனோபநிஷத்தில் "எதுவாக்கினாலும், மனசினாலும், கண்ணினாலும், காதினாலும், மூக்கினாலும் விளங்குகிறதில்லையோ, எது வாக்கையும், மனசையும், கண்ணையும், காதையும், மூக்கையும் விளங்கச்செய்கிறதோ அதுவே பிரஹ்மம்" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதனால், மனசுக்குத் தானேயியங்குந் தன்மையில்லையென்று ஏற்படுகிறது. இதன்பின்னே சொல்லப்பட்ட கண்ணுக்கும் இந்தயோக்யதையே கேட்கப்படுகின்றது. கண்ணைக்காணச்செய்தும், மனசை நினைக்கச்செய்தும் சிவம் இயக்கலால், கண்ணிலும் அதிக யோக்யதையுண்டென்று மனசைக் கொள்ள விடமில்லை. கண்ணின்வழியாக மனமே காணுகிறதெனின், மனசின் வழியாக ஆன்மாவே காணுகிறது என்னும் விடைவரும். அதற்குமேல், ஆன்மாவின் வழியாகச் சிவமேகாணுகிறது என்றுஞ் சொல்லவரும். சிவம் சடையற்ற பேரறிவாகையால் அது ஒன்றைக் காண்டலும், அதனை மற்றொன்றாற்காண்டலும், அதனாலோர் பயனை யெய்தலுங் கூடாது. மனமாதிகள் ஜடமாகையால் அவையும் ஒன்றைக்காணா. கண்ணுக்குப் பார்வைக்கண்ணாடியைப்போல அவை யொன்றையொன்றபேட்சித்துக் கொண்டிருக்கும். அதனால், அவையும் ஓர்பயனைவிரும்பவாவது, அடையவாவது கூடாது. இவைபோந்த ஆன்மாவே மனாதிகளாலும், சிவத்தாலும் உபகரிக்கப்பெற்று ஒன்றினைக் காணுகிறதாய், ஓர்பயனையெய்துகின்றதாக ஏற்படுகின்றது. இதையுய்த்துணருங்கால் மனசுக்குக் கூறிய ஆதிக்யம் ஜீவிக்கமாட்டாது. மனசுக்கு ஸ்வதந்திர பிரவர்த்தகமில்லாவிடினும், கண்ணைநோக்க ஆதிக்யந்தானேயெனின், கண்மாத்திரமேயன்றி ஏனையிந்திரியங்களிலும் ஆதிக்யம் வகித்ததே! அவ்வளவேயன்றிச் சிவத்தை யெட்டுவதில் இந்திரியங்களைக்காட்டிலும் உசிதயோக்யதை பெருமையால், மனசினால் தியானிக்கத்தக்கது சிவம், கண்ணுக்கு விக்கிரகரூபத்தில் விஷயமாகாதது சிவம் என்று கூறுவதில் ஒருகுறையு முண்டாகமாட்டாது.

ஆயின், கடோபநிஷத்தில் "மனஸைவேதமாப்தவ்யம்" என்று கூறி, மனசினால் பிரஹ்மத்தை யெட்டக்கூடும் என்று விளக்கியதென்னையெனின், மனசு பிரஹ்மத்தை எட்டாது மனசுக்குப் பிரஹ்மம் எட்டாது என்னுஞ் சுருதிக்கு விரோதமின்றிப் பொருள்கூற வேண்டும். ஒன்றுக்கொன்று விரோதமாகப்பொருள் கூறுவதுயாங்ஙனம்? கண்முதலிய விந்திரியங்களைப்போலவே மனசும் பரனை எட்டாது என்பது சத்தியம். கண்முதலிய விந்திரியங்கள் பரனைநேரிற் காணுவன்றி விக்கிரகமுதலியவைகளிற் காண்பது நைஜம். அப்படியே மனசும் அவனை நேரிற்காணுதலன்றி விக்கிரகமுதலியவைகளிற் காணத்தட்டில்லை. கண்முதலிய விந்திரியங்கள் தாமே காணுவாறுபோல மனமுந் தானேகாணமாட்டாது. கண்முதலிய விந்திரி

யங்கள் ஆத்மஞான ஸம்பந்தத்தால் காணுவதுபோல, மனமும் ஆத்மஞான ஸம்பந்தத்தால்காணும். கண்ணாவது, காதாவது, மூக்காவது, பரனை ஸாக்ஷாத்தாகக் காணாவாறுபோல மனசும் பரனை ஸாக்ஷாத்தாகக் காணாமையால் மனசு பிரஹ்மத்தை எட்டாது, மனசுக்குப் பிரஹ்மம் எட்டாது என்ற சுருதியும், கண் காது முதலியவைகள் ஆத்ம ஞானஸம்பந்தத்தால் விக்கிரக முதலியவைகளில் பரனை எட்டுவதுபோல மனசும் ஆத்மஞான ஸம்பந்தத்தால் பரனை எட்டுகின்றமையால் மனசினால் பிரஹ்மத்தை எட்டக்கூடும் என்ற சுருதியும் ஸமர்த்திக்கப்படும். இந்த முடிவால் (மனசினால் பிரஹ்மத்தை எட்டக்கூடும்) என்ற சுருதி அர்ச்சையையே தாபித்ததாயிற்று. இவ்வர்த்தத்தைக்கொண்ட சுருதிகளெத்தனை யிருப்பினும் அத்தனையும் அர்ச்சாவிஷயமாகவே சாதிக்கப்படுமன்றி வேறில்லை, இவ்வுண்மைகளை இனியேனுங்கூர்ந்து யோசித்துக் குணப்படுவாராக'

விக்கிரகமானது கல், செம்பு முதலியவைகளாற் செய்யப்பட்டு, அதைக் கண்ணானது கவர்ந்து அநுபவிக்கின்றது. இந்த விக்ரகாராதனமொழிந்து மனோத்யானமுண்டாகிறபோது அந்த மனசு கல், செம்புகளைக் கவராமல் ஸாக்ஷாத்தாகப் பரனைப் பற்றுகின்றது. இரண்டில் உசிதம் யாதுஎனின், கல், செம்பு விக்கிரகங்களையே கண்கள் கவர்ந்து ஆநந்திக்கமாட்டா. அந்தவிக்கிரகங்கள் பரனது உருவத்திருமேனிக்குப் பிரத்யாம்நாயமாக அமைக்கப்படுகின்றன. அவைகளில் பரனதுஅறிவே அதிகரித்து, அவனது உருவையே கவர்ந்து கண்கள் ஆனந்திக்கின்றன. வேதங்களில் உமாஸஹாயத்வம், திரிலோசநத்வம், நீலகண்டத்வம் இத்யாதி உருவங்கள் கேட்கப்படுகையால், அவைகளையேயன்றோ கண்கள் விக்கிரக வடிவங்களிற்கண்டு ஆநந்திக்கின்றன? ஓர் ஜைனவுருவம், பௌத்தவுருவம் இவைகள் விக்கிரகமாக வமைக்கப்பட்டபோது அவைகளில் எமது கண்களுக்கு இன்பமுண்டாகின்றதா? இதை யோசிக்கிறபோது கண்கள் கவர்ந்து ஆநந்திப்பது கல்லையுஞ் செம்பையுமா? அல்லது அவற்றில் வேறாகாத விரவிய பரனது உருவத்தையா? என்னும் வினாவுக்கு விடையுண்டாகும். இதனால், மனசினுங் கண்ணானது குறைந்த வநுபவத்தினது என்றுகொண்ட கோள் கோளாகவே முடிந்தது. இனி மனத்தை விசாரிப்போம். மனம் சிவத்தை எட்டாது என்று முன்னரே தீர்மானஞ் செய்திருக்கிறோம். ஆகையால், அது ஸாக்ஷாத்தாகப் பரனைப் பற்றுகின்றது என்று கூறுவது பயன்செய்யாது. மனசு தன்னினமாகிய ஜடங்களிற் சென்று சேருமேயல்லது நேராகச் சிவனைப் பற்றமாட்டாது. கண்ணானது பரனுருவத்தை விக்கிரகத்திற் பற்றியதென்னுங்கால், கண்ணின்வழியாக மனஸேபற்றியது என்று வெளியாகையால், கண்

காட்டாகத் தான்கண்ட பரனுருவத்தையே மீண்டும் அந்தமனங் கருதும். அதுவேயன்றித் தான் கண்ணின்வழியாக முன்காணாத பொருளை அது கருதவறியாது. அப்படியே ஏனையிந்திரியங்களின் வழியாகத் தனக்கு முன்னே விஷயமாகாத வொன்றினையும் அது கருதாது. ஆகவே, அது பரனை ஸாக்ஷாத்தாகப் பற்றுமெனல் யாங்ஙனம்? அது பரனை நேரேபற்றுதற்கு விஜாதியாகலானும், கண்முதலியவைகளும் அவ்வியற்கையின வாகலானும், கண்காட்டாக அது விக்கிரகத்திற்காணும் பரனுருவத்தையே மீண்டுங்கருதும்! கருதும்!! இவ்வுண்மையை அறிந்தபேர் கண்ணால் பரனை விக்கிரகத்தில் தரிசிப்பது மனசால் விக்கிரகத்திற்றரிசித்த பரனைத் தியானிப்பதிலுந் தாழ்ந்ததாகக் கூறார்! கூறார்!!

(இன்னும் வரும்.)

---o---

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் இருபத்தொராவது வருடப் பூர்த்தி விழாவும்

ஸ்ரீமான் யஸ். இரத்தினவேல் செட்டியாரவர்களுடைய The Saivite Elementary School என்னும் சைவபாடசாலையின் ஏழாவது வருடப் பூர்த்தி விழாவும்.

---o---

இவ்விழாக்கள் சென்னை தங்கசாலை வீதியில், தொண்டைமண்டலம் து. வே. பாடசாலைக் கெதிரிலுள்ள, இத்திருக்கூட்டத்துச் சபா மண்பத்தில், நிகழும் 1920ஸு மேமீ 9உ ஆதிவாரம் பகல் 3-மணி தொடங்கி ஸ்ரீமான் தி. த. கனகசுந்தரம்பிள்ளை, B, A, அவர்கள் அக்கிராசனம் வகித்து நடத்த நடைபெற்றது.

அப்போது இதில் 69-வது பக்கமுதல் வெளியிட்டுள்ள இத் திருக்கூட்டத்தின் (1919ஸு) 21-வது சபா வருடத்துச் சபாக்கிரந் தமும் வரவுசெலவு கணக்கும் வாசித்து அங்கீகரிக்கப்பெற்றன.

நிகழும் 1920ஆம் வருடத்திற்கு * இதின் 68-வது பக்கத்தில் குறிக்கப்பட்டுள்ளார் நிர்வாகசபையினராக நியமிக்கப்பெற்றார்கள்.

பாடசாலைப் பிள்ளைகளுக்குப் புத்தகப் பரிசு அளிக்கப்பட்டது.

ஸ்ரீமான் மணிமங்கலம் திருஞான சம்பந்த முதலியாரவர்கள் இத்திருக்கூட்டம் செய்து வருங் காரியங்களை யெடுத்து விளக்கி உபந்நியாசம் செய்தார்கள்.

முதலிலும் கடையிலும் தேவாரபாராயணமும் ஸ்ரீ நடராஜ மூர்த்திக்கு ஆராதனமும் செய்யப்பட்டன.

அக்கிராசனர் முதலியோருக்கு வந்தனமளித்தபின் 6 மணிக்குக் கூட்டம் கலைந்தது.

# நிர்வாக சபையார்.

## சபைத்தலைவர்.

ஸ்ரீமான், ச. இராஜாகண்ணுமுதலியாரவர்கள், B. A.
சூபரின்டென்டெண்டு அக்கவுண்டாண்டு ஜனரல் ஆபீஸ்.

## உதவிசபைத்தலைவர்.

,, தி. த. கனகசுந்தரம்பிள்ளையவர்கள், B. A
கவர்ன்மெண்டு பென்ஷனர்.

## காரியதரிசி.

,, இ. ஆதிமூலமுதலியாரவர்கள், கவர்ன்மெண்டுபென்ஷனர்.

## உதவிகாரியதரிசி.

,, இ. கண்ணப்பமுதலியாரவர்கள், வர்த்தகர்.

## அத்தியட்சர்கள்.

,, திரு. சபாபதிமுதலியாரவர்கள், ரிடைர்ட் ஸப் இஞ்சினீர்.

,, மணிமங்கலம் திருஞானசம்பந்தமுதலியாரவர்கள்,
கிளார்க்கு, M. S. M. Ry.

,, வே. நேத்திரசிகாமணிமுதலியாரவர்கள்
ஸப் போஸ்ட் மாஸ்டர்.

,, ஆர். பி. துரைசாமிமுதலியாரவர்கள்,
கவர்ன்மெண்டு பென்ஷனர்.

,, சைவமுத்துக்குமாரசாமிமுதலியாரவர்கள்,
தமிழ்ப்பண்டிதர், முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல்.

,, பி. வி. சமரபுரிமுதலியாரவர்கள், கிளார்க்கு
எம். எஸ். எம் ரெயில்வே ஆடிட் ஆபீஸ்.

,, திருவூர் தியாகராஜமுதலியார் அவர்கள்,
கிளார்க்கு அக்கவுண்டான்டு ஜெனரல் ஆபீஸ்

,, தி. குப்புசாமிமுதலியாரவர்கள், கிளார்க்கு
ரெயில்வே மெயில் சர்வீஸ்.

## கணிதபரிசோதகர்.

,, கூடலூர் சிவவாசுதேவமுதலியாரவர்கள்,
அக்கவுண்டாண்டு எம். எஸ். எம். ரெயில்வே.

———

# சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின்

# (1919ஞு)

## 21 ஆவது வருடத்துச் சபாக்கிரந்தம்.

---

மதிவளர் சடைமுடி மன்றுளா ரைமுன்
துதிசெயு நாயன்மார் தூய சொன்மலர்ப்
பொதிநல னுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை யுலகினில் விளங்கி வெல்கவே.

---

## திருக்கூட்டத்தின்
## இருபதாவது வருடப் பூர்த்திவிழாவும்
## ஸ்ரீமான் எஸ். இரத்தினவேல் செட்டியாரவர்கள்
## சைவபாடசாலையின்
## ஆறுவது வருடப் பூர்த்திவிழாவும்.

இவ்விழாக்கள் 1919ஞு ஏப்ரல்மீ 27உ நடைபெற்றன. அன்று காலை சென்னை தங்கசாலை வீதியிலுள்ள ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானர் திருக்கோயிலில் மகாபிஷேகமும், தேவாரபாராயணத்துடன் திருக்கோயில் வழிபாடும் செய்யப்பட்டன.

பகல் 3½-மணிக்குச் சென்னை டெலிகிராப் அப்பாயிநாயுடு வீதியிலுள்ள சைவபாடசாலையில் மகாஜனக்கூட்டம் கூடியது. அப்போது இத்திருக்கூட்டத்தினர் மாத்திரமன்றி மற்றவர்களுமாகத் திரளான ஜனங்கள் வந்து கூடினார்கள்.

திருக்கூட்டத்தின் சபைத்தலைவர் ஸ்ரீமான். ச. ராஜாகண்ணு முதலியாரவர்கள் B. A. அக்கிராசனத்தில் அமர்ந்தார்கள்.

ஸ்ரீமான் கா. முருகேசச்செட்டியார் அவர்கள் பிரேரேபிக்கவும், ஸ்ரீமான் கா. சமரபுரிச் செட்டியாரவர்கள் ஆமோதிக்கவும் அப்போது வந்திருந்தார் யாவருக்கும் அச்சிட்டுக்கொடுத்த திருக்கூட்டத்தின் (1918ஞூ) 20-வது சபாவருடச் சபாக்கிரந்தமும் வரவு செலவு கணக்கும் மகாசபையார் அனைவராலும் அங்கீகரிக்கப் பெற்றன.

நிகழும் 21-வது சபாவருடத்திற்கு இக்கிரந்தத்தின் 10 - ம் பக்கத்தில் குறித்தகனவான்கள் நிர்வாக சபையினராயிருக்க வேண்டுமெனவும், 20-வது சபாவருடத்தில் கணிதபரிசோதகரா யிருந்த ஸ்ரீமான் கூடலூர் சிவவாசுதேவ முதலியாரவர்களே நிகழும் 21-வது சபாவருடத்திலும் கணிதபரிசோதகரா யிருத்தல் வேண்டுமெனவும் தீர்மானம்செய்யப்பட்டது.

4½-மணிக்கு கனம்பொருந்திய உயர்தர நீதியதிபர் திவான் பஹதூர் பிரமஸ்ரீ T. சதாசிவ ஐயரவர்கள் B. A., M. L., விஜயஞ் செய்து அக்கிராசனத்தில் அமர்ந்தார்கள்.

அது முதல் 5½-மணிவரையில் தேசபக்தன் பத்திராதிபர் ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களும், ஸ்ரீமான் எஸ். சச்சிதானந்தம்பிள்ளை B.A., L.T., அவர்களும் முறையே "சைவசமயம்," "சமயபோதனை" என்னும் விஷயங்களை யெடுத்து நன்குவிளக்கி உபந்நியசித்தார்கள்.

அதன்பின் 6-மணிவரையில் சைவ பாடசாலை மாணவர் இருவர் ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் என்னும் விஷயத்தை யெடுத்துச் சம்பாஷித்தார்கள்.

6-மணிக்கு மேல் அக்கிராசனரவர்கள் மாணவர்களுக்குப் புத்தகப் பரிசளித்து, இத்திருக்கூட்டத்தினர் செய்துவரும் காரியங்களைச் சிலாகித்துப்பேசியும், உபந்நியாசகர்கள் கூறிய விஷயங்களில் இருந்த அருமைகளை விளக்கியும், மாணவர்கள்செய்த சம்பாஷணையை மிக வியந்தும் முடிபுரை கூறினார்கள்.

அனந்தரம் திருக்கூட்டத்தின் சபைத்தலைவர் ஸ்ரீமான் ச. ராஜாகண்ணுமுதலியாரவர்கள் B.A. அக்கிராசனர் முதலியோருக்குப் பூமாலை சூட்டவும், காரியதரிசி இ. ஆதிமூல முதலியார் வந்

தனமளிக்கவும், யாவரும் இன்பக்கடலிற் றிளைத்துக் கரகோஷஞ் செய்யவும், 7-மணிக்குச் சபைகலைந்தது.

---

## மகாசபை

| | |
|---|---|
| இந்த மகாச்சபையின் 1919ஆம் ஆரம்பத்தி லிருந்தவர்களின் தொகை. | 49 |
| 1919ஆம் சேர்ந்தவர்கள் | ... |
| ஷை நீங்கினவர்கள். | 11 |
| ஷை முடிவிலிருந்தவர்கள். | 38 |

இவர்கள் பெயர் முதலியன இதின் ஈற்றில் காட்டப்பட்டுள்ளன. இவர்களுள் பி. மாசிலாமணி முதலியாரவர்களும், பெ. சபாபதி முதலியாரவர்களும் சென்ற வருடத்தில் சிவபதமடைந்தார்கள்.

| | | | |
|---|---|---|---|
| இச்சபையார் 1918ஆம் | கொடுத்த மாதச்சந்தா | ரூபா | 251 |
| ஷை 1919ஆம் | ஷை | ,, | 212 |

---

## S. Rathnavelu Chettiar's Saivite Elementary School

### சைவ பாடசாலை.

இப்பாடசாலையில் 1918-வது வருடத்திலிருந்தது போலவே 1919-வது வருடத்திலும் முதல் வகுப்பு முதலாக ஐந்தாம் வகுப்பு வரையில் ஐந்துவகுப்புகளிலிருந்தன. மூன்று உபாத்தியாயர்களால் தமிழும் ஆங்கிலமும் சைவசமய பாடங்களும் கற்பிக்கப்பட்டன.

| | |
|---|---|
| இதில் சென்ற வருட ஆரம்பத்தில் இருந்த சிறுவர்களின் தொகை. | 70 |
| இடையில் சேர்ந்தவர்கள். | 62 |
| இடையில் நீங்கினவர்கள் | 72 |
| சென்ற வருட முடிவில் இருந்தவர்கள் | 60 |

1918௵ பிள்ளைகள் கொடுத்த சம்பளம் ரூபா 166
1919௵ ௸ ,, 162

1918௵ அரசாங்கத்தார் உபகரித்த தொகை ரூபா 236
1919௵ ௸ ,, 234

1918௵ பாடசாலைக்குச் செலவான தொகை ரூபா 419
1919௵ ௸ ,, 525

இட வசதிக் குறைவால் அதிகபிள்ளைகளைச்சேர்த்துக்கொள்ள இயலவில்லை.

இப்பாடசாலை 1919௵ சூலை௴ 28௳ அரசாங்கப்பாடசாலைகளின் உதவிப் பரிசோதகரால் பரிசோதிக்கப்பட்டது.

இச்சபையின் போஷகரும் Messrs Best & Co., துவிபாஷிகருமாகிய ஸ்ரீமான் எஸ். இரத்தினவேல் செட்டியாரவர்கள் 1917௵ சூன்௴ இப்பாடசாலைக்காக ஒரு கட்டடம் வாங்கிக் கொடுத்தார்கள். அதனால் இச்சபையார் மாதந்தோறும் கொடுத்துக்கொண்டிருந்த பாடசாலை வாடகை ரூபா பத்து மீதியாயிற்று. செட்டியாரவர்கள் பாடசாலைக்குக் கட்டடம் வாங்கிவிட்டதல்லாமலும், அது கட்டப்பட்டிருக்கும் நிலத்திற்கும் மாதந்தோறும் 6 ரூபா வாடகையும் கொடுத்துவருகின்றார்கள். இதற்காகச்செட்டியாரவர்களுக்குச் சபையார் மிகவும் நன்றி பாராட்டுகின்றார்கள்.

## சைவம்.

1918 ஆவது வருடத்தில் சைவம் என்னும் பத்திரிகைக்குச் சந்தாதாரர்களாயிருந்தவர்களின் தொகை (ஆயுள் சந்தாதாரர்கள் நீங்கலாக) 790
1919௵ ௸ ௸ 760

1918௵ வரையில் சேர்ந்திருந்த ஆயுள் சந்தாதாரர்கள் 204
1919௵ சேர்ந்த ௸ 2

ஆக கடந்த வருடம் வரையில் சேர்ந்திருந்த ஆயுள் சந்தாதாரர்கள். 206

இவர்களுள் 157 ஆயுள் சந்தாதாரர்கள் இரங்கோனிலிருந்து ஸ்ரீமான் மெ-செ-மெ-மெ-இராமநாதன் செட்டியாரவர்களாலும், ஸ்ரீமான் செவ-சித-சொக்கலிங்கஞ்செட்டியாரவர்களாலும் சேர்க்

கப்பெற்றவர்கள். 25 ஆயுள் சந்தாதாரர்கள் ஸ்ரீமான் கொத்தமங்கலம் தெ-பழ-சித-சதாசிவம் செட்டியாரவர்களாற் சேர்க்கப்பெற்றவர்கள். இவர்களுள் 195 பேருக்கே இப்போது பத்திரிகை அனுப்பப்படுகின்றது. எஞ்சிய பதினொருவருக்கு அனுப்பிய பத்திரிகைகள் திரும்பி வந்துகொண்டிருந்தமையால் நிறுத்த நேர்ந்தது.

1918 ஆவது வருடத்தில் இப்பத்திரிகையின் வரவு (ஆயுள் சந்தா நீங்கலாக) முன் வருடப்பத்திரிகைகள் விற்பனையால் வந்த வரவு சேர்த்து ரூபா 938

1919ஸ்ரீ ௸ ௸ ,, 881

1918ஸ்ரீ இப்பத்திரிகையின் பொருட்டுச் செலவான தொகை 882

1919ஸ்ரீ ௸ ௸ ,, 618

முன் வருடங்களிற் செய்ததுபோலவே சென்ற 1919ம் வருடத்திலும் பத்திரிகாசிரியர் எல்லாவேலைகளையும் பெரும்பாலும் தாமே செய்தமையாலும், சபையின் அச்சுக்கூடத்தில் பத்திரிகை அச்சிடப்பட்டமையாலும், செலவு மிகவும் குறைந்திருக்கிறது. இதைச் சந்தாதாரர்கள் சீர்தூக்கி இப்பத்திரிகைக்குப் போதிய சந்தாதாரர்களைச் சேர்த்து உபகரிப்பதும், சைவப்பிரபுக்கள் முன்வந்து இப்பத்திரிகைக்கு நன்கொடையளித்து ஆதரிப்பதும் கடனாம்.

காகிதம் முதலிய எல்லாப் பொருள்களின் விலையேற்றத்தை நோக்கியும், முன் 16 பக்கங்களாக வெளிவந்த இப்பத்திரிகை இப்போது 24 பக்கங்களாக வெளிவருவதை நோக்கியும் முன் 10 ரூபாவாயிருந்த ஆயுள்சந்தா சென்ற வருடமுதல் 15 ரூபாவாக்கப்பட்டது.

முன் பத்துரூபா கொடுத்த ஆயுள் சந்தாதாரர்களுக்குப் பின்னும் 5 ரூபா கொடுக்கும்படி பிரார்த்தித்துச் சென்ற வருடத்து முதலிதழ் 5 ரூபாவுக்கு வி. பி. தபாலில் அனுப்பப்பட்டது. இவர்களுள் 54 அன்பர்கள் மாத்திரம் 5 ரூபா கொடுத்து அதைப்

பெற்றுக்கொண்டார்கள். மற்றவர் யாவரும் திருப்பிவிட்டார்கள். இதற்கு இச்சபையார் வருத்தமுறினும், இவ்வாறு திருப்பியவர்களுக்கும் மற்றவர்களுக்கு அனுப்பப்படுவதுபோலவே பத்திரிகை அனுப்பப்பட்டுவருகிறது.

1917ஆு முடிவில் இவ்வச்சுக்கூடத்தில் சுமார் 1050 ரூபா மதிப்புள்ள சாமான்கள் இருந்தன. 1918 வது வருடத்தில் கவர்ன்மெண்டு அச்சுக்கூடத்தில் ஒரு ராயல் அச்சியந்திரம் வாங்கப்பட்டது. ஆதலால் அதற்குமுன் வாங்கின டெம்மியந்திரம் இலாபத்தோடு விற்றுவிடப்பட்டது. 1919ஆு கவர்ன்மெண்டு அச்சுக்கூடத்திலேயே ராயல் மெஷின் ஒன்று வாங்கப்பட்டது. அல்லாமலும் சுமார் 500 ரூபாவுக்கு புதிய அச்சுகளும் சில மரச்சாமான்களும் வாங்கப்பட்டன. இப்போது அச்சுக்கூடத்தின் மதிப்பு ஏறக்குறைய 4000 ரூபா. ராயல் மெஷின் முதவியவற்றால் அச்சுக்கூடம் மிக விருத்தியடைந்தும், காகிதப்பஞ்சத்தாலும் சில்லரை வேலைகள் (Job Work) செய்வதற்கு வேண்டிய Treadle என்னும் இயந்திரம் இல்லாமையாலும் சென்ற வருடத்தில் அச்சுக்கூடத்தில் போதிய வேலை நடைபெறாமல் நட்டமே உண்டாயிற்று. இவ்வியந்திரம் வாங்கி இலாபம் வருமாறு செய்துகொள்வதற்கு இன்னும் 1500 ரூபா வேண்டும் இதைச்சமயாபிமானிகள் கவனிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

## கடன்

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 1919ஆு ஜனவரிமீ 1உ வரையில் இருந்தகடன் | 500 | 0 | 0 |
| 1919ஆு வாங்கினகடன் | 575 | 11 | 6 |
| மொத்தம். | 1075 | 11 | 6 |
| ஷெஆு கொடுத்த கடன் | 650 | 0 | 0 |
| 1919ஆு டிசம்பர்மீ 31உ இருந்தகடன் | **425** | **11** | **6** |

## வரவு செலவு கணக்கு.

சென்ற வருடத்து வரவு செலவு கணக்கு M. & S. M. ரெயில்வே அக்கவுண்டாண்டு ஸ்ரீமான் கூடலூர் சிவவாசு தேவமுதலியாரவர்களால் பரிசோதிக்கப்பெற்று இதனீற்றில் சேர்க்கப்பெற்றுள்ளது.

## திருமுறை மகோற்சவம்.

இதுவழக்கப்படி 1919௵ நவம்பர்௴ 20௳ நடைபெற்றது. அச்சமயத்தில் கவுணியன் அச்சுக்கூடத்தலைவர் ஸ்ரீமான் கா. முருகேசச்செட்டியாரவர்கள் வழக்கப்படி சிவனடியார்கள் எண்ணிறந்தோர்க்கு மகேசுர பூசை செய்வித்தார்கள்.

## வந்தனம்.

இத்திருக்கூட்டத்திற்கு உதவிபுரிந்து சைவசமயபரிபாலனம் செய்பவரும், செய்விப்பவருமாகிய சாமாசிகரும், போஷகர் முதலியவர்களும் ஸ்ரீ சிவகாமசுந்தர நடராஜப்பெருமானாரின் திருவருளால் சகலசம்பத்துடன் நீடூழி நிலைபெற்றுவாழுமாறு அவ்வம்மையப்பர் திருவடிகளைத் தியானிக்கின்றோம்.

இங்ஙனம்;
உத்திரவின்படி காரியதரிசி
**இ. ஆதிமூல முதலியார்.**

நிகழும் 1920௵ ஜனவரி பிப்ரவரி மாதங்களில்
தேவகோட்டையில் கிடைத்த

### நன்கொடைகள்.

| | Rs. | A. | P. |
|---|---|---|---|
| ஸ்ரீமான் அரு-அரு-சோம சோமசுந்தரம் செட்டியாரவர்கள் | 150 | 0 | 0 |
| ,, மெ-அரு-அரு அருணாசலம் செட்டியாரவர்கள் | 50 | 0 | 0 |
| ,, ராம-அரு-அரு-ராம அருணாசலம் செட்டியாரவர்கள் | 50 | 0 | 0 |
| ,, A-L-A-R ஜமீன்தார். அருணாசலம் செட்டியாரவர்கள் | 20 | 0 | 0 |
| ,, மெ-லெ-மெ இராமநாதன் செட்டியாரவர்கள் | 18 | 12 | 0 |
| ,, அள-சுப-பள சுப்பிரமணியம் செட்டியாரவர்கள் | 15 | 0 | 0 |
| ,, அள-சித-அள அளகப்பச் செட்டியாரவர்கள் | 10 | 0 | 0 |
| ,, R-M-M-S-T வைரவன் செட்டியாரவர்கள் | 10 | 0 | 0 |
| ,, P-L-A வெங்கடாசலம் செட்டியாரவர்கள் | 5 | 0 | 0 |
| ,, அள-சித-லெ இராமநாதன் செட்டியாரவர்கள் | 4 | 11 | 6 |
| ,, உ-ராம-உ-மு இலட்சுமணன் செ' டியாரவர்தள் | 1 | 0 | 0 |

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின்
## 1919௵ வரவு செலவுக் கணக்கு.

### வரவு.

| | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1919௵ ஜனவரி௴ 1௳ இருப்பு | | | | 115 | 4 | 1 |
| மகாசபையார் மாதச்சந்தா | | | | 212 | 4 | 0 |
| தென் ஆப்பிரிக்காஇந்துசன்மார்க்கசபை நன்கொடை | | | | 93 | 0 | 0 |
| தேவகோட்டை ஸ்ரீமான் மெ. அரு. நா. இராமநாதன் செட்டியார் அவர்கள் அளித்தநன்கொடை | | | | 75 | 0 | 0 |
| சைவப்பத்திரிகையின் வருடச்சந்தாவும் முன்வருடப்பத்திரிகைவிற்பனையும் | 881 | 0 | 6 | | | |
| ஷை ஆயுள் சந்தா | 295 | 0 | 0 | | | |
| ஷை விளம்பர வரவு | 5 | 0 | 0 | 1181 | 0 | 6 |
| பாடசாலைக்கு அரசாங்கத்தார் நன்கொடை | 234 | 0 | 0 | | | |
| ஷை பிள்ளைகள் சம்பளம் | 162 | 8 | 0 | 396 | 8 | 0 |
| அச்சுக்கூடத்திற்கு மெஷீன்முதலியன வாங்கினதற்கு நேரிட்டகடன் | 575 | 11 | 6 | | | |
| அச்சுக்கூலி | 171 | 7 | 0 | 747 | 2 | 6 |
| சேவிங்ஸ் பாங்குவட்டி | | | | 10 | 6 | 0 |
| அகத்தியர் தேவாரத் திரட்டு விற்பனை | | | | 0 | 2 | 0 |
| ஆகமொத்த வரவு. | | | | 2830 | 11 | 1 |
| அடுத்த பக்கத்திற் காட்டியபடி மொத்த செலவு | | | | 2815 | 11 | 7 |
| 1919௵ டிசம்பர்௴ 31௳ இருப்பு | | | | 14 | 15 | 6 |

1919ஞு வரவு செலவுக் கணக்கு.

## செலவு.

## Mr. S. Rathnavelu Chettiar's Saivite Elementary School.

| | ரூ. | அ. | ப. | | | |
|---|---|---|---|---|---|---|
| **பாடசாலை.** | | | | | | |
| உபாத்தியாயர் சம்பளம் | 334 | 5 | 4 | | | |
| வேலைக்காரர், ரிஜிஸ்டர் முதலியன | 191 | 2 | 0 | 525 | 7 | 4 |
| **சைவப்பத்திரிகை.** | | | | | | |
| காகிதம் | 246 | 3 | 9 | | | |
| தபாற்செலவு | 220 | 9 | 9 | | | |
| சிப்பந்தி | 129 | 1 | 9 | | | |
| வண்டி முதலிய சில்லரைசெலவுகள் | 22 | 1 | 10 | 618 | 1 | 1 |
| **வைதிக சைவ அச்சுக்கூடம்.** | | | | | | |
| யந்திரங்களும், அச்சுகளும் | 262 | 5 | 6 | | | |
| சிப்பந்திகள் | 328 | 6 | 0 | | | |
| வீட்டுவாடகை | 120 | 10 | 10 | | | |
| மை வச்சிரம் வண்டிசத்தம் முதலிய பல சில்லரை செலவுகள் | 222 | 13 | 1 | 934 | 3 | 5 |
| தண்டற்காரர் சம்பளம் | | | | 47 | 0 | 0 |
| சபாமண்டப வாடகை | | | | 6 | 0 | 0 |
| கடன் | | | | 650 | 0 | 0 |
| வட்டி | | | | 6 | 8 | 0 |
| இச்சபையின் 20-வது வருடோற்சவம் கார்த்திகை ஞான தீபக் குடையாராதனை முதலிய நானாவித செலவுகள் | | | | 28 | 7 | 9 |
| ஆகமொத்த செலவு. | | | | 2815 | 11 | 7 |

கணிதபரிசோதகர். காரியதரிசி.

கூ. சிவ வாசுதேவ முதலியார். இ. ஆதிமூல முதலியார்.

Accountant M. S. M. Ry. Govt Pensioner

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின்

### போஷகர்கள்.

ஸ்ரீமான் எஸ். இரத்தினவேல் செட்டியாரவர்கள்
துவிபாஷிகர், மெஸ்ஸர்ஸ் பெஸ்ட் அண்டு கோ.

" ராவ்சாஹிப் பி. மாசிலாமணி முதலியாரவர்கள்
இஞ்ஜினீரிங் கண்ட்ராக்டர்.

" ராவ்பஹதூர் கே. வைத்தியலிங்கம்பிள்ளையவர்கள்
ரிடைர்ட் ப்ரெஸிடென்ஸிபோஸ்ட்மாஸ்டர்.

" வி. முத்தையா பிள்ளையவர்கள் வர்த்தகர், சென்னை.

" ஆர். காசிவிசுவநாத முதலியாரவர்கள்
பொடி புகையிலை வர்த்தகர், சென்னை.

" திரு. சபாபதிமுதலியாரவர்கள், ரிடைர்ட் சப் இஞ்சினீர்,
தங்கசாலை வீதி, சென்னை.

" வி. மாசிலாமணிப் பிள்ளையவர்கள், B. A. B. L, ஐ
கோர்ட்டு அப்பிஷியல் ரெவ்ரீ.

" சி. தருமலிங்கமுதலியாரவர்கள் கண்ட்ராக்டர்.

---

### நிர்வாக சபையார்.

### சபைத் தலைவர்.

ஸ்ரீமான் ச. இராஜாகண்ணுமுதலியாரவர்கள், B. A.
சூபரின்டென்டெண்டு அக்கவுண்டாண்டு ஜனரல் ஆபீஸ்.

### உதவி சபைத்தலைவர்.

" தி. ச. கனகசுந்தரம்பிள்ளையவர்கள், B. A.
கவர்ன்மெண்டு பென்ஷனர்.

### காரியதரிசி.

" இ. ஆதிமூலமுதலியாரவரகள், கவர்ன்மெண்டு பென்ஷனர்.

### உதவி காரியதரிசி.

" இ. கண்ணப்பமுதலியாரவர்கள், வர்த்தகர்.

## அத்தியட்சர்கள்.

ஸ்ரீமான் திரு. சபாபதிமுதலியாரவர்கள், ரிடைர்ட் ஸப் இஞ்ஜினீர்.
,, வே. கந்தசாமிமுதலியாரவர்கள், B. A. L. T.
கிறிஸ்டியன் காலேஜ் ப்ரோபெஸ்ஸர்.
,, வே. நேத்திரசிகாமணிமுதலியாரவர்கள்
ஸப் போஸ்ட் மாஸ்டர்.
,, ஆர். பி. துரைசாமிமுதலியார்வர்கள்,
கவர்ன்மெண்டு பென்ஷனர்.
,, டி. கந்தசாமிஆச்சாரியவர்கள், மானேஜர்
அப்பிஷியல் அஸ்ஸைனி ஆபீஸ்.
,, பி. வி. சமரபுரிமுதலியாரவர்கள், கிளார்க்கு
எம். எஸ். எம். ரெயில்வே சீப் இஞ்சினியர்ஸ் ஆபீஸ்.
,, வேலாயுதமுதலியாரவர்கள், கிளார்க்கு
ஸ்டாண்டார்டு ஆபில் கம்பெனி.
,, குப்புசாமிமுதலியாரவர்கள், கிளார்க்கு
ரெயில்வே மெயில் சர்விஸ்.

## கணித பரிசோதகர்.

,, கூடலூர். சிவவாசுதேவமுதலியாரவர்கள்,
அக்கவுண்டாண்டு எம். எஸ், எம். ரெயில்வே.

## சாமாசிகர் (அங்கத்தினர்.)

,, மி. பார்த்தசாரதி நாயுடு அவர்கள் ஜெயராம முதலியா
ரவர்கள், வாழைப்பழக் கிடங்கு.
,, கா. ரா. நமசிவாயமுதலியாரவர்கள், தமிழ்ப்பண்டிதர்.
,, மயிலை. முருகேசமுதலியாரவர்கள், கவர்ன்மெண்டு
பென்ஷனர்.
,, எஸ். விநாயகமுதலியாரவர்கள், B. A. அக்கவுண்டாண்டு
ஜெனரல் ஆபீஸ் சூபரிண்டெண்டாண்டு.
,, பி. லோகநாதமுதலியாரவர்கள், புரசை.
,, பெ. சபாபதிமுதலியாரவர்கள், மணிலா கிடங்கு.
,, கு. அ. ற. சுப்பராயசெட்டியாரவர்கள்,
ஒற்றைவாடை அரிசி மண்டி.
,, கோ. கணேசம், நீலகிரி, கோடப்பமந்து காப்பிவர்த்தகர்
,, கோ. ஆறுமுகமேஸ்திரியவர்கள், ஷை

,, பொ. அரங்கநாதமுதலியாரவர்கள், ஹோ. அண்டு. கோ.
,, பெங்களூர் நாகரத்தினம்மாள் அவர்கள், சங்கீதபண்டிதை
,, பார்த்தசாரதிமுதலியாரவர்கள், வெற்றிலை வர்த்தகர்.
,, சி. பா. கங்காதரமுதலியாரவர்கள், ஜவுளி பொடி வியாபாரம்.
,, சைவ. முத்துகுமாரசாமிமுதலியாரவர்கள், தமிழ்ப்பண்டிதர் முத்தியால்பேட்டை ஹைஸ்கூல்.
,, திருமணம் அண்ணாமலைமுதலியாரவர்கள், ஜமீன்தாரர்.
,, பி. எம் முருகேசமுதலியாரவர்கள், காக்ஸ்டன் அச்சுக்கூடம்.
,, கூ. சிவ்வாசுதேவ முதலியாரவர்கள் அக்கவுண்டன்டு, எம். அண்டு. எஸ். எம் ரெயில்வே.
,, சி. கன்னைய நாயுடு அவர்கள் கம்பெனி. காக்ஸ்டன் அச்சுக்கூட அதிபர்.
,, எம். நடேசமுதலியாரவர்கள், கார்ப்போரேஷன்.
,, டி. வி. குப்புசாமிமுதலியாரவர்கள், ஷராப், தாலூக்கா ஆபீசு.
,, ஆனந்தமூர்த்திமுதலியாரவர்கள்.
,, வி. எஸ். பரானந்தம்பிள்ளையவர்கள், 5 ரெயில்ரோட் பெங்களூர்.
,, முத்துசாமிமுதலியாரவர்கள், மதராஸ் பாங்கி முருகேச
,, ஆரணி. முருகேசமுதலியாரவர்கள் (முதலியார் குமாரர்.
,, திரு. அப்பர்சுந்தரமுதலியாரவர்கள்,
,, வே. நேத்திரசிகாமணிமுதலியாரவர்கள், ஸப்போஸ்டு மாஸ்டர்.
,, திருவூர். தியாகராஜ முதலியாரவர்கள் கிளார்க்கு அக்கவுண்டண்டு ஜனரல் ஆபீஸ்.
,, துரைசாமிமுதலியாரவர்கள் யம். அண்டு யஸ். யம். ரெயில்வே ஸ்டோர்ஸ்.
,, அம்பலவாணமுதலியாரவர்கள் கிராம்டன் அண்டு கோ.
,, தி. சந்திரசேகரமுதலியாரவர்கள், ப்ரோப்ரைட்டர் சந்திரா அண்டு கோ.
,, ப. வேலுமுதலியாரவர்கள், அருணசலமுதலிவீதி.
,, இராஜகோபாலமுதலியாரவர்கள், வர்த்தகர்.
,, தாத குருசாமிப்பிள்ளையவர்கள்

———0———

# கண்ணில் படலம் உரிப்பது

## (அரசாங்கப் பிரசுரம்)

---

கண்ணில் "படலம் உரிப்பது" என்னும் ரணவைத்தியம் செய்வதனால் உண்டாகும் அபாயங்களைப் பற்றிய குறிப்பு.

கண்படலம் (புரை) என்பது-வயதாய்க் கொண்டுவருகிறவர்களுடைய கண்களில் மிகவும் சாதாரணமாய்க் காணும் ஒரு வியாதி. இந்த வியாதி காணும்போது, கண்ணின் கருவிழியின் உட்புறத்தில் கனத்த மாசு ஒன்று படருகிறது; இதனால், இது காணும் நபருக்குக் கண் தெரிவதில்லை. இந்த மாசை அநேகமாய்ப் பூ என்று சொல்லுகிறதுண்டு. இந்தப் பூ பூர்த்தியாய் விழுந்திருக்கும்போது, கருவிழியானது, அதாவது கண்ணில் உருண்டை வடிவாயுள்ள கறுத்த பாகமானது வெண்ணிறமாகவோ சாம்பல் நிறமாகவோ மாறியிருப்பதைப் பார்க்கலாம்; கண்ணின் மிகுதி பாகமானது நன்றாயிருப்பதாகக் காணப்படுகிறது. இந்த மாசு கருவிழியில் இருக்கிறவரையிலே, இந்த வியாதி கண்ட நபருக்குக் கண் தெரியாது; அதைக்கருவிழியிலிருந்து அப்புறப்படுத்தி அது கண்ட நபருக்குத் தகுதியான மூக்குக்கண்ணாடிகளும் கொடுத்தால், அவர் எறக்குறைய முன்போலவே வஸ்துக்களைப் பார்க்கக்கூடும்.

2. இந்த வியாதியை சொஸ்தம் செய்வதற்கு இரண்டு வெவ்வேறு வகையான வைத்தியமுறைகள் அனுசரிக்கப்படுகின்றன. இவைகளில் ஒன்று ஐரோப்பிய வைத்தியத்தில் அப்பியாசமுள்ள டாக்டர்களாலும், மற்றொன்று வைத்தியர்களாலும் ஹக்கீம்களாலும் அனுசரிக்கப்படுகிறது. ஐரோப்பிய வைத்தியமுறைப்படி கண்ணுக்குள் இருக்கும் மாசு அல்லது பூவானது கண்ணிலிருந்து பூர்த்தியாய் வெளியில் எடுத்துவிடப்படுகிறது; வைத்தியர்களும் ஹக்கீம்களும் அனுசரிக்கும் முறைப்படியோ, அது கருவிழியிலிருந்து கண்ணின் இன்னும் ஆழமான பாகத்துக்குப் போய்விடும் படியாய்த்தான் உள்ளே தள்ளப்படுகிறது; அதை இனி பார்க்கமுடியாதிருந்தபோதிலுங்கூட, அது அங்கேயிருந்துகொண்டு அதிக கெடுதியை உண்டாக்கக்கூடும்; அப்படி அடிக்கடி கெடுதியையும் உண்டாக்குகிறது ஆகவே ஒரு முறையின்படி, வியாதியடைந்த பாகம் பூர்த்தியாய் இப்புறப் படுத்தப்படுகிறது; ஆனால் மற்றொரு முறையின்படியோ அது இன்னும் ஆழமான ஒரு இடத்தில் மறைத்துமாத்திரம் வைக்கப்படுகிறது; அது அவ்விடத்திலிருந்துகொண்டு மற்ற பாகங்களில் வியாதியை உண்டாக்கக் கூடியதாயிருப்பதுமல்லாமல், அநேகமாய்ப் பார்வையை அடியோடு கெடுத்தும் விடுகிறது.

3 கண்படலத்துக்காக வைத்தியர்களாலும் ஹக்கீம்களாலும் வைத்தியம் செய்யப்பட்ட குருடர்களில் எத்தனை பேர் தங்கள் கண்பார்வையை

,, பொ. அரங்கநாதமுதலியாரவர்கள், ஹோ. அண்டு. கோ.
,, பெங்களூர் ரத்தினம்மாள் அவர்கள், சங்கீதபண்டிதை
,, பார்த்தசாரதிமுதலியாரவர்கள், வெற்றிலை வர்த்தகர்.
,, சி. பா. கங்காதரமுதலியாரவர்கள், ஜவுளி பொடி வியா
,, சைவ. முத்துகுமாரசாமிமுதலியாரவர்கள், [பாரம்.
தமிழ்ப்பண்டிதர் முத்தியாலுப்பேட்டை. ஹைஸ்கூல்.
,, திருமணம் அண்ணாமலைமுதலியாரவர்கள், ஜமீன்தாரர்.
,, பி. எம் முருகேசமுதலியாரவர்கள், காக்ஸ்டன் அச்சுக்கூடம்.
,, கூ. சிவவாசுதேவ முதலியாரவர்கள் அக்கவுண்டன்டு, எம். அண்டு. எஸ். எம் ரெயில்வே.
,, சி. கன்னைய நாயுடு அவர்கள் கம்பெனி. காக்ஸ்டன் அச்சுக்கூட அதிபர்.
,, எம். நடேசமுதலியாரவர்கள், கார்ப்போரேஷன்.
,, டி. வி. குப்புசாமிமுதலியாரவர்கள், ஷராப், தாலூக்கா ஆபீசு.
,, அனந்தமூர்த்திமுதலியாரவர்கள்.
,, வி. எஸ். பரமானந்தம்பிள்ளையவர்கள், 5 ரெயில்ரோட் பெங்களூர்.
,, முத்துசாமிமுதலியாரவர்கள், மதாரஸ் பாங்கி முருகேச
,, ஆரணி. முருகேசமுதலியாரவர்கள் (முதலியார் குமாரர்.
,, திரு. அப்பர்சுந்தரமுதலியாரவர்கள்,
,, வே. நேத்திரசிகாமணிமுதலியாரவர்கள், ஸப்போஸ்டு மாஸ்டர்.
,, திருவூர். தியாகராஜ முதலியாரவர்கள் கிளார்க்கு அக்கவுண்டண்டு ஜனரல் ஆபீஸ்.
,, துரைசாமிமுதலியாரவர்கள் யம். அண்டு யஸ். யம். ரெயில்வே ஸ்டோர்ஸ்.
,, அம்பலவாணமுதலியாரவர்கள் கிராம்டன் அண்டு கோ.
,, தி. சந்திரசேகரமுதலியாரவர்கள், ப்ரோப்ரைட்டர் சந்திரா அண்டு கோ.
,, ப. வேலுமுதலியாரவர்கள், அருணாசலமுதலிவீதி.
,, இராஜகோபாலமுதலியாரவர்கள், வர்த்தகர்.
,, தாத குருசாமிப்பிள்ளையவர்கள்

———0———

# கண்ணில் படலம் உரிப்பது

## (அரசாங்கப் பிரசுரம்)

———o———

கண்ணில் "படலம் உரிப்பது" என்னும் ரணவைத்தியம் செய்வதனால் உண்டாகும் அபாயங்களைப் பற்றிய குறிப்பு.

கண்படலம் (புரை) என்பது-வயதாய்க் கொண்டுவருகிறவர்களுடைய கண்களில் மிகவும் சாதாரணமாய்க் காணும் ஒரு வியாதி. இந்த வியாதி காணும்போது, கண்ணின் கருவிழியின் உட்புறத்தில் கனத்த மாசு ஒன்று படருகிறது; இதனால், இது காணும் நபருக்குக் கண் தெரிவதில்லை. இந்த மாசை அநேகமாய்ப் பூவென்று சொல்லுகிறதுண்டு. இந்தப் பூ பூர்த்தியாய் விழுந்திருக்கும்போது, கருவிழியானது, அதாவது கண்ணில் உருண்டை வடிவாயுள்ள கறுத்த பாகமானது வெண்ணிறமாகவோ சாம்பல் நிறமாகவோ மாறியிருப்பதைப் பார்க்கலாம்; கண்ணின் மிகுதி பாகமானது நன்றாயிருப்பதாகக் காணப்படுகிறது. இந்த மாசு கருவிழியில் இருக்கிறவரையிலே, இந்த வியாதி கண்ட நபருக்குக் கண் தெரியாது; அதைக்கருவிழியிலிருந்து அப்புறப்படுத்தி அது கண்ட நபருக்குத் தகுதியான மூக்குக்கண்ணாடிகளும் கொடுத்தால், அவர் எறக்குறைய முன்போலவே வஸ்துக்களைப் பார்க்கக்கூடும்.

2. இந்த வியாதியை சொஸ்தம் செய்வதற்கு இரண்டு வெவ்வேறு வகையான வைத்தியமுறைகள் அனுசரிக்கப்படுகின்றன. இவைகளில் ஒன்று ஐரோப்பிய வைத்தியத்தில் அப்பியாசமுள்ள டாக்டர்களாலும், மற்றொன்று வைத்தியர்களாலும் ஹக்கீம்களாலும் அனுசரிக்கப்படுகிறது. ஐரோப்பிய வவத்தியமுறைப்படி கண்ணுக்குள் இருக்கும் மாசு அல்லது பூவானது கண்ணிலிருந்து பூர்த்தியாய் வெளியில் எடுத்துவிடப்படுகிறது; வைத்தியர்களும் ஹக்கீம்களும் அனுசரிக்கும் முறைப்படியோ, அது கருவிழியிலிருந்து கண்ணின் இன்னும் ஆழமான பாகத்துக்குப் போய்விடும் படியாய்த்தான் உள்ளே தள்ளப்படுகிறது; அதை இனி பார்க்கமுடியாதிருந்தபோதிலுங்கூட, அது அங்கேயிருந்துகொண்டு அதிக கெடுதியை உண்டாக்கக்கூடும்; அப்படி அடிக்கடி கெடுதியையும் உண்டாக்குகிறது. ஆகவே ஒரு முறையின்படி, வியாதியடைந்த பாகம் பூர்த்தியாய் இப்புறப்படுத்தப்படுகிறது; ஆனல் மற்றொரு முறையின்படியோ அது இன்னும் ஆழமான ஒரு இடத்தில் மறைத்துமாத்திரம் வைக்கப்படுகிறது; அது அவ்விடத்திலிருந்துகொண்டு மற்ற பாகங்களில் வியாதியை உண்டாக்கக்கூடியதாயிருப்பதுமல்லாமல், அநேகமாய்ப் பார்வையை அடியோடு கெடுத்தும் விடுகிறது.

3. கண்படலத்துக்காக வைத்தியர்களாலும் ஹக்கீம்களாலும் வைத்தியம் செய்யப்பட்ட குருடர்களில் எத்தனை பேர் தங்கள் கண்பார்வையை

மறுபடியும் அடைகிறார்களென்பதைக் கண்டு பிடிக்கும்பொருட்டு, சென்ற சில வருஷகாலமாக சென்னப்பட்டணம் கவர்ன்மெண்ட் கண்ணாஸ்பத்திரியில் வெகு ஜாக்கிரதையாக ஆராய்ச்சிசெய்யப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட வியாதியஸ்தர்களில் எண்ணூற்றுமுப்பத்தாறு பேரைப் பரிசோதித்துப் பார்த்ததில், 176 பேர்தான் பிரயோசனகரமான (6/60-ம் அதற்கு அதிகமானதுமான) பார்வையை அடைந்தார்களென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது; அதாவது, அப்படி வைத்தியஞ்செய்யப்பட்டவர்களில் 100 பேருக்கு சுமார் 21 பேர்தான் தெருக்களில் தனியாய் நடந்துபோவதற்கும் தங்கள் அலுவலைப் பார்த்துக்கொண்டுவருவதற்கும் போதுமானபடி சரியான பார்வையை அடைந்தார்கள். இப்படிக்கல்லாமல், கண்படலம், கண்ட நூறு பேருக்கு சாதாரண திறமையுள்ள ஒரு ஸர்ஜனால் ஐரோப்பிய முறைப்படி வைத்தியம்செய்யப்பட்டால் ஏறக்குறைய 90 பேர் நன்றாய்ப் பார்க்கக்கூடியவர்களாயிருப்பார்கள்; மேலும், பாக்கி பத்துபேரில் அநேகர் இந்த வைத்தியத்தினால் சிறிதுமட்டில் நன்மையை அடைவார்கள். ஆகையால், வைத்தியர்களாலும் ஹக்கீம்களாலும் வைத்தியம் செய்யப்பட்டிருந்த 836 பேர்களுக்கும் ஐரோப்பிய முறைப்படி வைத்தியஞ்செய்யப் பட்டிருந்தால், 176 பேருக்குத்தான் கிடைத்திருந்ததுபோலல்லாமல் 752 பேருக்குப் பிரயோசனகரமான பார்வை கிடைத்திருக்கும். மேலும், பார்வையில்லாமல் விடப்பட்டவர்கள் 660 பேராயிராமல் 84 பேராகத்தான் இருப்பார்கள்.

4. மேலே கண்ட சங்கதியைப் படிக்கிறவர்களெல்லாரையும் அதைப் பற்றித் தங்களுடைய சிநேகிதர்களுக்கும் அயலார்களுக்கும் சொல்லும்படிக்கும், கண்படலத்திற்காக வைத்தியர்களும் ஹக்கீம்களும் செய்யும் வைத்தியமானது நூற்றுக்கு 79 வீதம் பிரயோசனமில்லாமற் போகிறதுடன், அதனால் பல தடவைகளில் நிலையானதும் தீராததுமான குருட்டுத்தனம் உண்டாகிறதென்றும் ஒவ்வொருவருக்கும் எச்சரிக்கை செய்யும்படிக்கும் கேட்டுக்கொள்ளலாகிறது.

5. அநேகம் பேர் பிரக்கினை தப்பியிருக்கும்போதாவது அவர்களுக்குக் கடுமையான யாதொரு வியாதி கண்டிருக்கும்போதாவது எரிச்சலை உண்டாக்கும் மருந்துகளை அவர்களுடைய கண்களில் அறிவில்லாதவர்கள் போடுவதனால், அவர்கள் குருடர்களாய்ப்போய் விடுகிறார்களென்றும் சென்னப்பட்டணத்திலுள்ள ஆஸ்பத்திரியில் அடைந்த அனுபவத்தினால் தெரியவருகிறது. இப்படிச் செய்வது முழுவதும் புத்தியில்லாத்தனம்; ஏனென்றால், இந்தவைத்தியத்தினால் எவ்விதமான பிரயோசனமும் உண்டாகாமலிருப்பதோடு, அந்த வியாதியஸ்தன் பிழைக்கிறபட்சத்திலே, அவனுடைய ஆயுட்கால முழுவதுக்கும் குருடனாயும் விடுவான். பிரக்கினை தப்பியிருக்கும் மனிதர்களின் கண்களைப் பொங்கக்காய்ச்சியிருக்கும் ஜலத்தினால் கழுவி, அவைகளில் ஆமணக்கெண்ணெயை விடவேண்டும்; ஆனால் வேறே மருந்து போடும்படி திறமையுள்ள வைத்தியரொருவர் சொன்னாலொழிய, அப்படிச் செய்யக்கூடாது.